போன் நெ: 15 விலை 2 அணா REGD NO 4642

திராவிடநாடு

மலர் 12 | 18—10—53 | இதழ் 16

இந்தத் தெளிவு நீடிக்குமா?

[அடிகள்]

★

"நம்முடைய யோக்கியதையைப் பாருங்கள்"

"நாம் எவ்வளவு நல்லவர்கள் தெரியுமா?"

"அநாகரிகமாக நடக்கவேமாட்டோம்":

"அநாகரிகமாக நடக்கமாட்டோம் என்பது ஒருபுறமிருக்கட்டும், அநாகரிக எண்ணமே நம்மிடம் கிடையாதே!"

*

"அவர்களுடைய யோக்கியதையைப் பாருங்கள்"

"அவர்கள் எவ்வளவு கெட்டவர்கள் தெரியுமா?"

"அநாகரிகமாக நடப்பதே அவர்களுடைய வேலை"

"அநாகரிக எண்ணங்களைத் தவிர வேறெதுவும் அவர்களுடைய உள்ளத்தில் உற்பத்தியாவதில்லை"

*

இவை, இப்போது சில நாட்களாக ஆச்சாரியாரால் வழங்கப்படும் சர்டிபிகேட்டுகள்.

இந்தச் சர்டிபிகேட்டுகளில் ஒன்று நம்மைப்பற்றியது — மற்றொன்று அவர்களைப்பற்றியது.

திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம் எப்படிப்பட்டவர்கள்—காங்கிரஸ் கட்சியினராகிய அவர்கள் எத்தன்மைவாய்ந்தவர்கள்—இது, இப்பொழுது ஆச்சாரியாரால் நடத்தப்படும் ஆராய்ச்சியாகும்.

அண்மையில், பண்டித நேரு சென்னைக்கு வந்து, "காட்டுமிராண்டிகள்" யார் என்பதைப் பல திறப்பட்ட அரிய பெரிய முயற்சிகளின் வாயிலாக ஆராய்ச்சிசெய்து கண்டு பிடித்துக்கூறிவிட்டுச் சென்றதிலிருந்து, ஆச்சாரியார் இந்த ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறார். இந்த உண்மையை அவரே ஒப்புக்கொண்டு பேசியும் இருக்கிறார்.

> "சென்ற சில தினங்களாகப் பண்டித நேருவுடன் சுற்றுப் பிரயாணம் செய்ததால் அநாகரிகம் பற்றிக் குறிப்பிடுகிறேன்"

என்று 9—10—53-ல் சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதநேருவுக்கு இன்றைய நாம் யார்? நம்முடைய யோக்கியதை என்ன? நம்முடைய குறிக்கோள் எது? என்பது ஒருவேளை தெரியாதிருக்கலாம், அல்லது தெரிவிக்கப் படாமல் இருக்கலாம். ஆனால் அன்றைய நாம் யார்? நம்முடைய யோக்கியதை என்ன? நம்முடைய நாகரிகம் எத்தன்மையது? என்பன போன்ற உண்மைகள் அவருக்குத் தெரியும்—சரித்திரம் படித்தவர்.

ஆச்சாரியாருக்கு அன்றைய நம்மைப்பற்றியும் இன்றைய நம்மைப் பற்றியும் நன்கு தெரியும்—நம்முடன் இருப்பவர்.

என்றபோதிலும், நாம் யார்? என்பது பண்டித நேரு கூறிய பின்னர் தான் தமக்குத் தெரிந்ததென்று, தம்முடைய வழக்கமான 'சாமர்த்தியப் பேச்சால்' பேசிக் காட்டுகிறார்.

பண்டிதநேரு நம்மை நாகரிக மற்ற காட்டுமிராண்டிகள் என்று கூறினார். ஏன் இவ்விதம் கூறினார்? இதுவும் ஆச்சாரியாருக்குத் தெரியும். ஆனால், நாம் யார் என்பது மட்டும் இவருக்குத் தெரியாதாம். நேரு கூறிய பின் தான் தெரிந்ததாம். நாம் நாகரிகமான முறையில் நடப்பதில்லை என்பது நேருவின் கண்டு பிடிப்பு. பண்டிதரின் ஆராய்ச்சி நாம் யார் என்பதை ஆச்சாரியாருக்கு விளக்கியிருக்கிறது. எனவே நம்முடைய 'அநாகரிகம்' இப்போது ஆச்சாரியாருக்கு நன்றாகத் தெரிகிறது. நாலைந்து நாட்களாகப் பண்டித நேருவுடன் சுற்றுப் பிரயாணம் செய்ததன் விளைவாக நாம் நாகரிக மற்றவர்கள் என்பதை ஆச்சாரியார் அறிந்துகொண்டாராம்.

நாம் யார் என்பது நம்முடன் இருக்கும் ஆச்சாரியாருக்குத்தெரியவில்லை. தொலைவில் இருக்கும் பண்டித நேருவுக்குத் தெரிகிறது. சாணக்கியத் தந்திரங்களில் இதுவும் ஒன்று போலும்!

*

நாம் பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டியது அநாகரிகமாம். பல ஆயிரக்கணக்கான மக்கள்

அவரை வரவேற்கும்போது ஒரு சிலர் மட்டும் கருப்புக்கொடி காட்டுவது எப்படி நாகரிகமாகுமென்று ஆச்சாரியார் கேட்கிறார். பலர் வரவேற்றனர்—சிலர் கருப்புக்கொடி காட்டினர். பலர்! சிலர்! பலர் சிலராகலாம். சிலர் பலராகலாம். நேற்றுப் பலர்! இன்று சிலர்! நாளை பலர். இந்தப் பலரும் சிலரும் என்றைக்கும் நிலையாக இருப்பவர்களல்ல. பலர், தங்களுடைய நடவடிக்கைகளினால் சிலராவதும், சிலர், தங்களுடைய நடவடிக்கைகளினால் பலராவதும் அனுபவத்தில் காணப்படும் உண்மை. பலர் சிலராகும்போது பலம் குறைகிறது—சினம் மேலிடுகிறது — எதைப் பேசலாம், எதைப்பேசக்கூடாது என்ற நிதானமே தவறிவிடுகிறது. ஆனால், சிலர் பலராகும்போது பலம் அதிகரிக்கிறது — படை வளர்கிறது— எதை யெதை எப்படி யெப்படிச் செய்யலாம்-பேசலாம்என்ற தெளிவு ஏற்படுகிறது—நிதானம் நிலைபெற்று விடுகிறது.

பலர் சிலராகும்போது பதட்டம் அதிகரிக்கிறது. சிலர் பலராகும் போது பண்பு அதிகரிக்கிறது.

பலர் சிலராகும்போது பரபரப்பு ஏற்படுகிறது. சிலர் பலராகும் போது அமைதி நிலவுகிறது.

பலர் சிலராகும்போது பகைமை உணர்ச்சி ஏற்படுகிறது. சிலர் பலராகும்போது சேரவாரும் செகத்தீரே என்ற நட்புணர்ச்சி ஏற்படுகிறது.

பலர் சிலராவதைப் பார்க்கும் போது பரிதாபம் உண்டாகிறது, சிலர் பலராவதைப்பார்க்கும்போது பரவசம் உண்டாகிறது.

பலர், சிலராவதைக் காணும் போது அந்தப் பலரின் தலைவனுக்குச் சீற்றமும், சிலர், பலராவதைக் காணும்போது அந்தச் சிலரின் தலைவனுக்குச் சீலமும் ஏற்படுவது இயற்கையே என்றபோதிலும், பலர் ஏன் சிலராகின்றனர்? அதற்குக்காரணம் என்ன? என்பதை அந்தப்பலரின் தலைவன் தனக்கேற்படும் பதட்டத்தைப் பக்குவப்படுத்தி யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஆனால், இந்தச் சிறந்த பண்புஎல்லோருக்கும், எளிதில் ஏற்படுவதில்லை. ஒரு காலத்தில் பலராக இருந்து, இடையில் யாது காரணத்தாலோ சிலராகி, மீண்டும் பலராகும் பரம்பரையினர்க்கன்றி, மற்றவர்களுக்கு இந்த நற்பண்பு ஏற்படுவது முயற்கொம்புதான்.

*

பாலாற்று வெள்ளம்போல் சிலர், பலராகின்றனர். பாலாற்றில் வெள்ளம் வந்தால் பத்திரிகைகளில்கூடப் படம் போட்டுக் காட்டப்படுகிறது. அதுபோல், அந்தப் பலர் பவனி வருகின்றனர், அவர்களைப் பார்க்க மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுகின்றனர். பாலாற்றில் வெள்ளம் வந்தால் காணாததைக் கண்டதுபோல் மக்கள் வேடிக்கை பார்க்கின்றனர். ஆனால் காவிரியாற்றில் வெள்ளம் வந்தால் யாரும் வேடிக்கை பார்ப்பதில்லை. மழையின்மை காரணமாகக் காவிரியாற்றில் ஒவ்வொரு சமயத்தில் வெள்ளம் குறைந்தபோதிலும் அதன் உயிர்த்தன்மை குறைவதில்லை. சிறிதளவாவது வெள்ளம் ஓடிக்கொண்டுதான் இருக்கும்.

பாலாற்றில் வெள்ளம் வந்தது— பத்திரிகைகளில் படம் போட்டுக் காட்டப்பட்டது.

பண்டிதநேரு பவனி வந்தார் — பல ஆயிரக்கணக்கான மக்கள் அவரைப் பார்க்க வந்தனர்.

பாலாற்றில் வெள்ளம் வந்தது— பல ஆயிரக்கணக்கான மக்கள் அதனைப் பார்த்தனர்.

பண்டிதநேரு பவனி வந்தார் — பத்திரிகைகளில் படம் போட்டுக் காட்டப்பட்டது.

பண்டிதநேரு திராவிடத்தில் பவனி வந்துபோனதும் உடனே பாலாற்றிலும் வெள்ளம் பவனி வந்தது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஒரு வாரத்துக்குள்ளாகவே நடைபெற்றுள்ளன. அன்றாடம் பத்திரிகைகளைப் பார்ப்பவர்களுக்கு இந்த உண்மை நன்றாகத் தெரியும்.

பண்டிதருக்குப் பலர், சிலராகி வருவது தெரிகிறது.

ஆச்சாரியாருக்குச் சிலர் பலராகி வருவது தெரிகிறது.

பலர், சிலராவது பண்டிதருக்குப் பதட்டத்தை உண்டாக்குகிறது.

சிலர், பலராவது ஆச்சாரியாருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது.

தஞ்சை மாவட்டத் தோழர்களுக்கு

அன்புடையீர்!

வணக்கம். நம் மாநில கவர்னர் ஸ்ரீ பிரகாசா தஞ்சை மாவட்டத்தில் இம்மாதம் 25ந்தேதியிலிருந்து 29ந்தேதிவரை சுற்றுப் பயணம் வர இருக்கிறார். இம்மாநிலத்தில் நடக்கும் அராஜகச் செயல்களுக்கும், வெறி நிறைந்த நடவடிக்கைகளுக்கும், சட்டத்தையும், ஜனநாயகத்தையும் தூசியாக மதித்து அலட்சியமாக நடக்கும் அக்ரமத்துக்கும் இடங்கொடுக்கும் வடநாட்டுஏகாதிபத்திய ஏஜண்டுக்கு நம் வெறுப்பையும் அதிருப்தியையும் காட்ட கீழ்க்கண்ட இடங்களில் கருப்புக்கொடிகளைப் பிடியுங்கள். கழகத்தின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் கைவிடாமல் கூட்டம் கூட்டமாக அடியிற்கண்ட இடங்களில் குறிப்பிட்ட தேதிகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

25—10—53 தஞ்சாவூர்
26—10-53 திருக்காட்டுப்பள்ளி
27—10—53 அய்யம்பேட்டை
28—10-53 காலை கும்பகோணம்
28—10—53 மாலை திருவாரூர்
29—10—53 காலை நாகப்பட்டிணம்
29—10—53 மாலை நாகூர்.

கே. கே. நீலமேகம்,
தஞ்சை மாவட்ட
தி. மு, க. செயலாளர்.

பதட்டமும் ஆத்திரமும் ஒன்று சேருகிற பொழுது பொறாமை உண்டாகிறது.

இந்தப் பொறாமை, புன்மொழிகளை அள்ளி வீசச் செய்கிறது. வெந்த புண்ணிலே வேல்! எரிகிற நெருப்பில் எண்ணெய்! இந்நிலைமை அந்தப் பொறாமை அவர்களுக்கு உண்டாக்கிவிடுகிறது. எனவே அகராதியைத் தேடி, வார்த்தைகளைக் கண்டுபிடித்து, வாயினால் அளந்து கொட்டுகிறார்கள். பலர், சிலராவதைக்காணக் காணச் சீற்றம் மேலிடுகிறது — சிந்தை கொந்தி போகிறது — சில்லரை வேலைகளில் இறங்கச் செய்துவிடுகிறது. வசைமாரி, கசைமாரி இரண்டையுமே கையாளும்படி செய்துவிடுகிறது. தலைவன் வாயினாலும் தொண்டன்

...கயினாலும் வேலை செய்ய ஆரம் ...த்துவிடுகிறார்கள்.

*

ஒருவர்மீது ஏற்பட்டுள்ள வெறுப் ...ன் காரணமாக அவருக்குக் கருங் ...க்கொடி காட்டுவது அநாகரிகமாம்! ஒருவர்மீது ஏற்பட்டுள்ள வெறுப் ...ன் காரணமாக அவரைத் திட்டு ...து நாகரிகமாம்!

...நாம் பண்டித நேருவுக்குக் கருப் ...க்கொடி காட்டியது அநாகரிகமாம்! பண்டிதநேரு நம்மைத் திட்டி ...ு நாகரிகமாம்! கூறுகிறார், ஆச் ...ரியார்.

"பண்டிதநேருவுக்கு கருப்புக் கொடி பிடித்தது, அவர்களுடைய அநாகரிகத்தை எடுத்துக்காட்டு கிறது."

...து ஆச்சாரியார் நம்மீது சுமத் ...ம் குற்றச்சாட்டு. ஆனால் பண்டித ...ரு மலைப்பிரதேசங்களுக்குச் ...ன்று, அங்கு வாழும் நாகரிக ...ற மக்களைக் கண்டு, அவர்களை ...நாம் (திராவிடர்கள்) மிகமோச ...வர்கள் என்று கூறியது, நாக ...த்தின் உச்சநிலையில் இருப்பவர் ...ின் செயலாம்.

...ாகரிகம் எது? அநாகரிகம் எது? ...ரியுமா இவர்களுக்கு? நாகரிகம் ...ல் எப்படி என்பதைச் செய ...செய்துகாட்டும் நாம் அநாகரிகர் ...ாம்! நாகரிகம் என்ற சொல்லை ...னாலும் உச்சரிக்கும் அருகதை ...அனைவர்கள் நாகரிகர்களாம். ...ாலென்றால் கொக்கு; கொக் ...ன்றால் கோணலாய் இருக்கும் ...ு ஒருவன், ஒரு பிறவிக் குரு ...க்கு விளக்கம் கூற, அவன், அப்படியா?' என்று ஆச்சரியப் ...டானாமே! அதுபோல், நாகரிகம் ...ல், 'அது இப்படி' என்று ...க்கம் கூறினால் 'ஆ! அப்படியா?' ...று ஆச்சரியப்பட்டு வாய் ...ந்து நின்றவர்கள், இன்று நாக ...பற்றிப் பேசுகின்றனர் என்றால் ...வரவேற்கக்கூடியதுதான்! எல் ...ரும் நாகரிகம் வாய்ந்த நல்லவர் ...ய் நாட்டில் உலவவேண்டுமென் ...தான் நமது ஆசை. ஆனால், ...ரிகமற்ற முறையில் நடப்பவர் ...நாகரிகமாக நடப்பவர்களைப் ...த்து, 'இவர்கள் எல்லோரும் ...ரிகர்கள்' என்று கூற முன் ...ம்போதுதான் நமக்கு வேதனை ...டாகிறது. பொறுமையின் அள வைக்கூட இவர்கள் சோதிக்கிறார் களே என்றதுயரம் ஏற்படுகிறது.

*

நம்மை நாகரிகமற்றவர்கள் என்று பண்டித நேரு கூறியதை வலி யுறுத்த முன்வந்த ஆச்சாரியார், தாம் யார் என்னதையும் விளக்கத் தவறவில்லை.

நாம்—இது எப்படித் திராவிடர் கள் அனைவரையும் குறிப்பிடும் ஒரு சொல்லாக அமைகிறதோ, அது போலவே, தாம் என்ற சொல்லும் அவர்கள் அனைவரையும் குறிப்பிடும் ஒரு சொல்லாக ஆச்சாரியார் அமைத்துப் பேசியிருக்கிறார். ஆச் சாரியார், தம்மைப்பற்றி, அதாவது தம்முடைய இனத்தவர்களைப்பற்றி பேசியபோது,

"நம்முடைய யோக்கியதை யைப் பாருங்கள். மகாத்மாவை ஒருவன் சுட்டுக் கொன்றுவிட் டான். இதைவிட அநாகரிகம் நம் நாட்டில் உண்டா? இதை நாம் மறந்துவிடுவோமா?"

என்று குறிப்பிட்டுள்ளார். காந்தி யடிகளைக் கொன்ற கயவன் யார்? கோட்சே! கோட்சே எந்த இனத் தைச் சேர்ந்தவன்?.........! உத்த மர் காந்தியைக் கொன்றதுபோன்ற அநாகரிகமான— காட்டுமிராண்டித் தனமான—அறிவீனமான — முட் டாள்தனமான — பைத்யகாரத்தன மான – குறுகிய மனப்பான்மையான செயல், இந்நாட்டில் வேறெதுவும் இல்லை. இந்த உண்மையை ஆச்சாரி யார் மட்டுமல்ல, அகில உலகமுமே கூறுகிறது.

ஆனால், நாகரிகம் எங்கே பதிந்து கிடக்கிறது—அநாகரிகம் எங்கே உறைந்து கிடக்கிறது என்பதை ஆச்சாரியாரும், அவர்தம் இனத்த வரும், ஒவ்வோர் சமயங்களில் மறந்து, பாடத்தைத் தலைகீழாக ஒப்புவிக்க முன்வந்துவிடுகிறார்களே என்பதை நினைக்கும்போதுதான், அவர்கள்மீது பரிதாபம் ஏற்பட்டு, ஐயோ பாவம்! ஆணவம் கலந்த அறியாமையால் இப்படியெல்லாம் உளறிக்கொட்டுகிறார்களே என்று எண்ணி இரங்கவேண்டி இருக் கிறது.

பலர், சிலராகிக்கொண்டு வரும் நேரத்தில், பண்டிதர் என்றாலும் சரி! ஆச்சாரியார் என்றாலும் சரி! யாருக்கும், பார்ப்பதெல் லாம் பயமூட்டுவது போலவும், கேட்பதெல்லாம் கிலியுண்டாக்கு வது போலவும், எண்ணுவதெல் லாம் ஏக்கத்தைத் தருவது போல வும்தான் தோன்றும். பேச்சில் ஏச்சும், கருத்தில் கபடமும், பார்வையில் பீதியும் உண்டாகும்.

சிலராக இருந்து, படிப்படியாகப் பண்பை மறவாது, பலராகி வருப வர்களுக்கு, இவையெல்லாம் சிந்தை மகிழச் செய்யுமேயன்றி, ஒருபோதும் சீற்றத்தை உண் டாக்காது.

*

நாம் பலராகின்றோம். அவர்கள் சிலராகின்றனர்.

*

திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து முன்னேறுகிறது. காங்கி ரஸ் ஸ்தாபனம் கரைந்து சிதைகி றது.

*

இதைப் பார்க்கும் பண்டித நேருவுக்குப் பதட்டம் உண்டாகி றது—ஆச்சாரியாருக்கு ஆத்திரம் ஏற்படுகிறது.

நமக்கு, அமைதி – கண்ணியம் – கட்டுப்பாடு வலுப்பெறுகிறது. வகையற்றவர்களின் கவைக்குதவாக் கடுஞ்சொற்களை ஒரு காதால் கேட்டு, மறு காதால் வெளியே அனுப்பிவிட்டு, நமது இலட்சியப் பாதையில் இறுமாந்து நடக்கி றோம். இடுக்கண் நேர்ந்தால் அத னைத் துடைக்கத் தூய்மையான வழி எது என்பதிலேயே கருத் தைச் செலுத்திக்கொண்டிருக்கி றோம். துச்சமாக எதனையும் நினைப் பதில்லை—பேசுவதுமில்லை. அதே சமயத்தில், அச்சத்தால் அடி பணிந்து கொள்கையை விட்டுக் கொடுப்பதுமில்லை. மானத்துக்கா கவே வாழ்பவர்கள் என்ற மரபில் வந்தவர்கள் நாம். மமதை கொள்ள மாட்டோம். மறந்தும் மக்கட் பண்பை இழக்கமாட்டோம்.

பலர், சிலராகும் வேகத்தில், அவர்களில் சிலருக்குச் சீற்றம் ஏற் பட்டு, மனித விலங்குகளாக மாறி விடுகின்றனரே, அந்த நிலை, நமக்கு ஒருபோதும் ஏற்படாது. நாட்டிலே பிறந்த நாம், காட்டுக்குப் போக மாட்டோம். போனால், அந்தக் காடும் நாடாகும். ஆனால், சிலர் இருக்கிறார்கள், நாட்டைக் காடாக்

குபவர்கள்; அவர்களுக்கு, நாடு காடாகவேண்டுமென்பதில் பெரு விருப்பம். அவர்களுக்கு, காட்டில் காணப்பட்டவை எல்லாம் நாட்டிலும் காட்சியளிக்கின்றன. காடுகளில் காட்டுமிராண்டிகள் இருப்பதைப் பார்த்துவிட்டு வந்தால் போதும், உடனே நாட்டில் இருப்பவர்களை எல்லாம் காட்டுமிராண்டிகள் என்று கூறிவிடுகின்றனர். தமக்குப் பிடியாதவர்கள் யாராய் இருந்தாலும், அவர்கள் எல்லோரும் காட்டுமிராண்டிகள் என்று கலக்கமின்றிக் கூறிவிடுகின்றனர். இத்தகையவர்களின் இந்தப் போக்கைப் பார்த்து நகைப்பதைத் தவிர, வேறென்ன செய்வது?

*

பலர், சிலராகும் போது பலமும் குறைந்து விடுகிறது. பலம் குறைந்தவர்களுக்குக் கோபம் அதிகம் என்று சொல்லுவார்கள். அதாவது உடம்பில் நல்லிரத்தம் இல்லாதவர்களுக்கு அடிக்கடி கோபம் வருமாமே! அதுபோல், பலம்இழந்தவர்கள்—மேலும் இழந்து கொண்டே இருப்பவர்கள், பலமடைந்தவர்களை—மேலும் பலமடைந்து வருபவர்களைப்பார்த்துக்கோபப் படுகிறார்கள். அந்தக் கோபம் அவர்களைக்குறுக்கு வழிகளில் செல்ல வைக்கிறது — கோணல் சேட்டைகளைப் புரிய வைக்கிறது — குறுகிய மனப்பான்மையை வளர்த்து விடுகிறது.

பலர், சிலராகும்போது படை பலமும் குறைந்து விடுமல்லவா? இழந்த பலத்தை மீண்டும் பெறலாம் என்று நினைக்கும் போது, அதற்குத் தகுதியான ஒரு படை பலமும் அவசியமாகிறது. அந்தப் படை, பலரைச் சிலராக்கிய படை போல் இருக்கக் கூடாது. வேறு விதமான படையே வேண்டுமென்று நினைப்பதும் இயற்கையே. பலரைச் சிலராக்கிய படையைப் பற்றிய விபரமெல்லாம் அந்தச் சிலரானவர்களுக்குத்தான் தெரியுமேயன்றி, சிலரைப் பலராக்கும் படையை வைத்திருப்பவர்களுக்கு எப்படித் தெரிய முடியும்?

பலர், சிலரானவர்கள் இப்போது ஒரு படைதிரட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தப் படை அந்த நாள் இராமனுக்கு வாய்த்த படை போல் இருக்க வேண்டுமாம். ஆனால், ஒன்று மட்டும் இருக்கக் கூடாதாம். அது தவிர, மற்ற எல்லாக் குணங்களும் இந்தப் படைக்கும் இருக்க வேண்டுமாம். இராமனுடைய படைக்கு வால் இருந்ததாம். இந்தப் படைக்கு அந்த வால் மட்டும் இருக்கக் கூடாதாம். படை திரட்டும் தளபதி இவ்விதம் கூறுகிறார்.

"இராமனுடன் இலங்கைக்குச் சென்ற வானர சேனை போல் இந்த இளைஞர்கள் சேனை வளர வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். (கரகோஷம்) வானரங்கள் அன்று எந்தத் தர்ம எண்ணத்தின் தைரியம், பலம், உற்சாகத்துடன் சென்றதோ, அம்மாதிரி தர்ம எண்ணத்துடன் இளைஞர்கள் சேனை வளர்ந்து செல்ல வேண்டும். வால் தவிர, மற்றவை அந்த வானரங்களுக்கு இருந்ததைப்போல் இளைஞர்களுக்கும் இருக்க வேண்டும்"

என்று புதிய தளபதியும், கமாண்டருமான மிஸ்டர் சி. இராசகோபாலாச்சாரி அவர்கள் கூறியுள்ளார். பலமிழந்தவர்களுக்காக ஒரு புதிய படைதிரட்டி, அதன் மூலம் பழைய பலத்தைப் பெறலாம் என்று கருதி நியமிக்கப்பட்ட காப்டன் இவ்விதம் கூறுவதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

நாட்டை விட்டுக் காட்டை அடைந்த இராமனுக்கு எப்படி ஒரு படை தேவைப்பட்டதோ, அப்படி இவர்களுக்கும் ஒரு படை இப்போது தேவைப்படுகிறது. உண்மையை ஊன்றி நோக்கும் போது இவர்களும் அந்த இராமனைப்போல் நாட்டை விட்டுக் காட்டுக்குத்தான் வந்திருக்கிறார்கள். அதாவது ஜனநாயகம் என்ற நாட்டிலிருந்து சர்வாதிகாரம் என்ற காட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

ஜனநாயக முறையைப்போதித்து வந்த காந்தியடிகள் ஒரு படையைத் திரட்டி வைத்திருந்தார். அது இப்போது இல்லை. கலைக்கப்பட்டு விட்டது அல்லது அதன் தளபதி இல்லாததால் தானாகவே கலைந்து விட்டது—கரைந்து விட்டது.

எனவே, ஜனநாயக வாதியி... சீடர் சர்வாதிகாரியாக மாறிவிட்ட காரணத்தால், தன்னுடைய சர்வாதிகார முறைப்படி நாட்டை ஆ... அதற்கேற்ற ஒரு படையைத் திரட்ட முற்பட்டிருக்கிறார். இரா... னுடைய படைக்கிருந்த குணங்கள் எல்லாம் இந்தப் படைக்கும் இரு... வேண்டுமாம். அதாவது வால் த... மற்ற எல்லாக் குணங்களும் இரு... வேண்டுமென்று பொருள். வி... கம் தேவையா? பல்லிளித்த... மரத்துக்கு மரம் தாவுதல், கை... கிடைத்ததைக் கசக்கி எறி... என்ற இன்னபிற குணங்கள் இ... படைக்கும் அவசியமாம். சுருக்... சொல்ல வேண்டுமானால், "குர... கையில் அகப்பட்ட மலர் மா... போல் என்று ஒரு பழமொழி ... வார்களே, அதுபோல் இந்த... படையும் பணிபுரிய வேண்டும... அப்பொழுதுதான் அரும்பாடு... டுப் பெற்ற சுதந்திரத்தைக் கா... பாற்ற முடியுமாம். அதாவது, ... டிலே நல்ல காரியங்களைச் செ... வருபவர்களை, குரங்கு, மலர் மா... லையைக் கசக்கி எறிவது போல் கச... னால் தான், பண்டித நேரு, ஆச்... யார் போன்றோரின் கூட்டுச் ச... திரத்தை (தவறு தவறு) சர்வ... காரத்தைக் காக்க முடியுமாம்! ... காக்கப் பட்டால்தான் அ...

(15-ம் பக்கம் பார்க்க)

சென்னையில் எதிர்பாருங்கள்
நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும்
அவர் தம் குழுவினரும் நடிக்கும்
சி. என். அண்ணாதுரை தீட்டிய
காதல் ஜோதி
நாடகம் நடைபெறும்.

கண்ணீர், சொரிகிறோம்!

அரசியல் வாழ்வில், சில சமயங்களில், ஆத்திரக்காரர்கள் புறப்பட்டு, நிலைமையைக்கெடுத்து விடுவர்.

இத்தகைய ஆத்திரக்காரர்களின் பட்டியல் வளர்வதை, நாம், ஆரம்பமுதலே, கண்டித்து வந்துள்ளோம்.

தி. மு. க. வின் குரல், மக்கள் செவிகளில் ஒலிப்பதைக் கண்ட இந்த ஆத்திரக்காரர்கள் ஈடுபட்ட வெறிச் செயல்களை நாடு அறியும்.

'தேனி'யில் தோழர் நெடுஞ்செழியனைப் பிணமாக்க முயன்றனர்.

'சீர்காழி'யில் தோழர் மு. கருணாநிதியைச் சாய்க்க முயன்றனர்.

வண்ணாரப்பேட்டை தோழர் கே. எஸ். பாண்டியனைப் படுகொலை செய்தனர்.

நெல்லிக்குப்பம் தோழர் மஜீதை, பொதுத் தேர்தலில் பெற்ற தோல்வியால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாக, குத்திக் கொன்றனர்.

நிலக்கோட்டையில், காத்தான் தாக்குண்டார். அவர் தம்பி கருப்பையாவுக்கு கையில் அரிவாள் வெட்டு.

சின்னாளப்பட்டியில், கூட்டத்தைக் கலைக்க முயற்சி; ஒருவருக்கு தலையில் காயம்.

ராணிப்பேட்டையில், காந்தி ஜெயந்திவிழாவில் கழகத் தோழர்களைத் தாக்கினர்.

அம்மாப்பேட்டையில், கழகக் கொடி பறக்கக்கூடாதென அட்டகாசம்; ஆர்ப்பாட்டம்.

திருவல்லிக்கேணியில், ஹனீபா பாடும்போது, கல்லடி, கலவரம் — காங்கிரஸ் தோழர்களால்.

பரமத்தியில், பொதுக்கூட்டம் நடைபெறாமல் செய்ய அட்டகாசம், கலாட்டா.

ஆச்சாள்புரத்தில், கழகக் கூட்டத்தில் புகுந்து ரௌடித்தனம், பலருக்கு அடி.

கோவையில், கழகக்கொடியை தீக்கிரையாக்கினர்; காரியாலயத்தைத் தாக்கினர்.

கொலை, வெட்டு, கலாட்டா, தீ, கல்வீச்சு — இத்தகைய காட்டுமிராண்டி முறைகளால், நமது குரலை ஒடுக்கிட முயன்றனர், பிற்போக்கு வாதிகள், அரசியல் வியாபாரத்தில் அமர்ந்திருக்கும் மஞ்சள் நிறத்தோர் தாம், இத்தகைய செயல்களில் ஈடுபட்டோராகும். ஒரு பக்கம் சர்க்காரின் அடக்குமுறை! மறுபக்கம் 'சர்க்காரை நடத்துவோர்' எனக் கூறிக்கொள்வோரின் அட்டகாசம்!! இரண்டுக்குமிடையில் நமது கொள்கை பட்டுப்போய் விடவில்லை.

இத்தகைய ஆத்திரக்காரர்கள், அஹிம்சா பாதையில், முளைப்பது காண — சிந்தை நொந்தோம், நாம். தேசீயத் தலைவர்கள், கண்டிக்க முன் வருவரென, நம்பினோம். எவரும், வரவில்லை. மாறாக, அத்தகைய, ஆத்திரக்காரர்களின் செயலைக்கண்டு, மகிழ்ந்ததாகவும் கேள்விப்பட்டு, மிகமிக வருந்தினோம்.

சில இடங்களில், அத்தகைய ஆத்திரக்காரர்கள் மீது, போலீசார், வழக்குத் தொடர்ந்தனர். நீதி மன்றங்களை, எதிர்நோக்கி நின்றோம். வழக்குகள், பாதகமாகவே முடிந்தன. பல ஆத்திரக்காரர்கள், வெற்றி வீரர்களாக வெளிவந்தனர். உடையார்பாளையம் வேலாயுதம் கொலை வழக்கிலிருந்து இன்று வரை, இத்தகைய, விபரீதம் நாட்டில் வளர்வதைக் காண, நல்லோர், மிக மிக அஞ்சினர். இத்தகைய அச்சம் ஏற்பட்டதற்குக் காரணம், அரசோச்சும் கட்சியாகிய காங்கிரஸ், இத்தகைய ஆத்திரக்காரர்களின் பக்கபலமாக இருந்ததுதான்.

*

அரசியல், மக்களின் வாழ்வைச் செப்பனிடத்தான். இதனை, அடியாட்களும், தடிதூக்கிகளும் நிரம்பிய, சபாமண்டமாக ஆக்கிவிட்டால், பின் அறிவுக்கும் நேர்மைக்கும் இடமில்லை. தடிதான், தர்பார் புரியும்! உருட்டு விழிதான், ஊராளும்!! இந்நிலையேற்படின், ஜனநாயகம், கேலிக்கூத்தாகும்.

ஜனநாயகப் பண்பில், முக்கியமான ஒன்று— மாற்றுக் கருத்துக்களை, மற்றவர், காது கொடுத்துக் கேட்பதும், அக்கருத்துக்களைத் தமது கருத்துக்களால் மோதி, வீழ்த்துவதும் தான். கருத்துகளைக் கவனித்து, தீர்ப்பளிக்கும் பொறுப்பை, மக்கள் வசம் விட்டுவிட வேண்டும். இதை விடுத்து, "என்னிடம் பயில்வான் கருப்பையா உண்டு! தெரியுமா, அவர் சாமர்த்தியம். சேர, வா, என் சங்கத்தில். மறுத்தால், அடிப்பேன்! வீட்டைக் கொளுத்துவேன்!!" என்று முழக்கமிடுவதென்பது, காட்டு முறை. இதற்குக் காங்கிரசார் கை கொடுப்பதைக் கண்டு, தி. மு. க. கண்ணீர் சொரிந்த நேரங்கள், உண்டு. தன்னுடைய தோழர்கள் பிணமாக்கப்பட்ட போதும், தி. மு. க. கண்ணீர் சொரிந்ததேயன்றி இக்காட்டு முறையை எதிர்த்துத் தாக்குங்கள் என்று, என்றும் தூண்டியதில்லை.

இயலாது என்பதல்ல, இதற்குக் காரணம்.

இந்த முறை கூடாதென்பதும் இத்தகைய ஆத்திரக்காரர்கள், எந்தக் கட்சியிலிருந்தாலும், அவர்கள் யாவரும் நம்முடைய சகோதரர்கள் தானே — அவர்கள் வெட்டிக்கொண்டு வீழ்வதால் நமது குடும்பம்தானே சீர்குலையும் என்பதும்தான், காரணமாகும்.

இதனாலேயே, தி. மு. க. தலைவர்கள், 'பழைய' இடத்தில் இருந்தபோதும் சரி, தி. மு. கழகம் துவக்கிய பின்பும் சரி, இந்த 'அன்பு மார்க்கத்தை' அடிக்கடி வலியுறுத்தத் தவறிய தில்லை. அதிலும் தி. மு. க. பொதுச்செயலாளர், அடிக்கடி, இதனை, சென்ற இடமெல்லாம், தேசியக் கட்சிச் சகோதரர்களுக்கு, வேண்டுகோள்களாக, விடுக்கத் தவறியதில்லை.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக, நாட்டின் சில இடங்களில், ஆத்திரக்காரர்கள், தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றனர் எனும் செய்திகள், வரத் துவங்கியுள்ளன.

'சைதாப்பேட்டை'யில் துவக்கப்பட்ட இந்தக் காட்டு முறை மவுண்ட்ரோடில் வளர்ந்து, கோவையில் உருவெடுத்து, மேட்டுப்பாளையத்தில் விபரீதமாகி, மதுரையில், ஒரு உயிரைக் கொண்டு போகுமளவுக்கு, சென்றுவிட்டது.

ஒவ்வோர் இடத்திலும் தாக்கப்பட்டோர், தி. மு. க. தோழர்களாகயிருந்தும், மதுரையில் மட்டும் வருந்தக்கூடிய சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. தி. மு. க. தோழர்கள் பல இடங்களில் தாக்கப்பட்டார்கள் — சில இடங்களில் கத்திக்குத்து — என்கிற செய்திகளைக் கண்டதுமே, திகைத்தோம்.

"இதனைச் சகித்துக்கொள்கிறோம். அண்ணா சொல்லிய வாசகம், எங்கள் இதயத்தில் இருக்கிறது. எதையும் தாங்கும் இதயம் உண்டு!" என்று மதுரைத் தோழர் முத்து, எம்மைச் சந்தித்தபோது, செப்பிச் சென்றார்—நமது தோழர்கள், சிந்திய கண்ணீரோடும், கண்ணியம் நிரம்பிய உள்ளத்தோடும் நடந்து கொள்வதாகக் கூறினார்.

மகிழ்ந்தோம் — ஆனால், மறுதினமே, விபரீதச் செய்திகள் கிடைத்தன. தி. மு. க. பொருளாளர் தோழர் கிருஷ்ணசாமி (திராவிடநாடு ஏஜண்டு) கடையில் வெட்டுண்டதாக அறிந்தோம். அதைத் தொடர்ந்து, சில இடங்களில், சில தேசியத் தோழர்கள், காயமடைந்ததாகவும் கேள்விப்பட்டோம்.

கடைசியில் இதன் விளைவாகத் தோழர் கருப்பையா பாரதி எனும் தேசிய இளைஞர், உயிரிழந்ததாக, உள்ளம் வெதும்பும் தகவல் கிடைத்துள்ளது.

உண்மையில், இந்த விபரீதம் காணும் எவர் உள்ளமும் வருந்தாமற் போகாது.

வெட்டுண்ட தி. மு. க. தோழர் கிருஷ்ணசாமியும் ஆபத்தான நிலைமையில் இருப்பதாக அறிகிறோம்.

நெஞ்சு கொதிக்கிறோம்—காட்டு முறையைக் கையாண்டதன் விளைவாக, தோழர் கருப்பையா பாரதி, பிணமாகிவிட்டார்:— இந்தச் செய்தி, அவர் போன்ற எல்லாத் தேசிய இளைஞர்களையும் சகோதரர்கள் எனக் கருதும், நமக்குப் பெருந்துயர் தருகிறது. விபரீதத்தால், உயிரிழந்த, அந்தத் தமிழ் மைந்தனின் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், நம்முடைய ஆழ்ந்த வருத்தங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*

காங்கிரசாட்சியில், இதுபோன்ற அரசியல் கொலைகள், சர்வசாதாரணமாகிவிட்டன. காரணம், ஆட்சியிலிருப்போர், இதெல்லாம் மகிழ்ச்சிக்குரிய காரியங்களென நினைப்பதேயாகும்.

குறிப்பாக, திராவிடக் குல மைந்தர்களில் ஒருவரான தேசிய இளைஞர் கருப்பையாவின் மரணத்துக்கு, முதலமைச்சர் ஆச்சாரியார் அவர்களையும், அவர்தம் குழாத்தையுமே, குற்றம் சாட்டுகிறோம்—நாம்.

இதனைக் கோபுரத்து உச்சியினின்றும், கூவிச் சொல்லமுடியும்.

'கல்கி'—இதழ், "திருப்பித் தாக்குங்கள்!"—என்று, தீட்டிற்று.

கண்டிக்கவில்லை, ஆச்சாரியார். "ஒருகை பார்க்கப் போகிறோம்"—என்றனர், தேசியப் பிரசங்கிகள். அதுவும், அவர் முன்னிலையில்.

புத்திமதி கூறவில்லை, ஆச்சாரியார். அது மட்டுமின்றி, செல்லுமிடந்தோறும், தீயைக் கிளறியபடியே இருந்து வருகிறார்! அரசோச்சுபவர், ஒருபக்கம் அதிகாரத்தால், மாற்றுக் கட்சியினரை மட்டந்தட்ட விரும்புவதோடு—மற்றோர் பக்கம் வாலிபர்களின் உள்ளங்களைத் தூண்டிவிட்டும், வருகிறார்.

ஜனநாயகப் பண்புப்படி, தி. மு. க. வின் திட்டங்களை இழித்தும் பழித்தும், கண்டித்தும் பிழை கண்டும், ஆச்சாரியார் பேசட்டும்; அப்படி பேசுவதே, முறையும் கூட.

ஆனால்அவர், அந்த அளவோடு, நிற்பதில்லை —இதுபோது.

ஆங்காங்கும் சென்று, "திராவிடமுன்னேற்றக் கழகத்தை சரியானபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த எறும்புகளை, நசுக்கிக் கொல்ல வேண்டும். இவர்கள், கணக்கை முடிவு செய்ய வேண்டும்" என்று பேசுகிறார்.

இது, ஏற்கனவே, தேசியக் கட்சியில் உருவாகியுள்ள ஆத்திரக்காரர்களின் உள்ளத்தில், துணிவைச் சிருஷ்டித்துவிட்டது.

அரசோச்சுபவரே இப்படிக் கூறுகிறார் என்றால், அவர்கள் உள்ளத்தில், "ஆள்வது நம் கட்சி. அவரே, அப்படிச் சொல்கிறார். ஆகவே, தி. மு. க.வை, அழிக்கவேண்டும்! அதற்கு வழி, அரிவாள் தூக் வதுதான்" என்கிற, துணிவு, ஏற்படாமலா, இருக்கும்?

இத்துணிச்சலின் விளைவாகத்தான், நாம் கருப்புக்கொடி காட்டச் செல்லும்போது மேலே கதர்க்கொடியும் கீழே தடியும் ஏந்தியவாறு, இந்த ஆத்திரக்காரர்கள், கூடத் தலைப்பட்டனர்.

விளைவு, விபரீதமாகி வருகிறது. தோழர் கருப்பையா, பிணமாகி இருக்கிறார்.

இத்தகைய ஆத்திரக்காரர்களைத் தூண்டிவிட்டு, எதிர்க் கட்சிகளைத் தாக்கச்செய்து, இதன் பழியை எதிர்க்கட்சிகள்மீது போட்டு, 'குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க' நினைக்கிறார் ஆச்சாரியார்.

அவரது, அரசியல் சாணக்கியம், இவ்வளவு கீழ்த்தரமாகச் செல்வது குறித்து உண்மையாகவே, வேதனைப்படுகிறோம்.

இவ்விதம், ஆத்திரக்காரர்களை சிருஷ்டிப்பதால்—ஆங்காங்கும், சட்டத்துக்குப்பயந்திருந்த 'தடிதூக்கிகளுக்கெல்லாம் 'சான்சு' வந்துவிடுகிறது. சொந்தச் சண்டைகளைக் காரணமாக வைத்து, கலவரங்களை உண்டாக்கி, அதற்கு கட்சிப் பெயரைச் சூட்டிவிடும் நிலைமையும் ஏற்பட்டுவிடுகிறது.

இத்தகைய நிலைமையால்தான், தோழர் கருப்பையா, உயிரிழந்திருக்கவேண்டும்.

இந்தச் சூழ்நிலை வளர்வதை, தி. மு. க. என்றும் விரும்பாது—இதனை நாட்டிலுள்ளோர் அறிவர்—மதுரை மக்களும் அறிவர்—காங்கிரசிலுள்ள கண்ணியர்களும் அறிவர்.

அந்தக் கண்ணியர்களைக் கேட்டுக் கொள்கிறோம்—காட்டுமுறையை வளர்க்க விரும்பும் அரசியல் வேட்டைக்காரர்களின் வாயை அடக்குங்கள்—அவர்கள் சுகமாக வாழ்வர்! அனுபவிப்பது நாளைய உலகில் வாழப்போகும் நாம்தான்!!

'அவர்கள்'—வயதானவர்கள். 'நாமோ'—வாழவேண்டியவர்கள்.

'அவர்கள்'—நோக்கம், அரசியல் லாபம். 'நாமோ', நாட்டின், நல்வாழ்வு விரும்பிகள்.

நம்முடைய சகோதரர்களின் குருதி, தாய் மண்ணில் ஓடவேண்டாம்! தக்கோரே, தடுக்க வாரீர்! 'சாணக்கிய' தந்திரங்களை முறியடிக்க வாரீர்!! என்று, அரசியல் காரணத்துக்காக உயிரிழந்த தி.மு.க. தோழர்கள் மஜீது பாண்டியன், வேலாயுதம் சார்பில், அல்ல—மதுரைக் கருப்பையாவின் சார்பில், அழைக்கிறோம். கண்ணீரைக் காட்டி, அழைக்கிறோம்.

சென்னை அரசாங்கமே, திரும்பிப் பார்!

"எங்கள் கிராமத்தின் ஜனத்தொகை 2800. அதில், பள்ளிக்கூடம் செல்லவேண்டிய வயதுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை [illegible]0. என்றாலும், சென்ற பத்தாண்டுகளாக எங்கள் கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம்கூட கிடையாது. இதற்கு முன்னர் நடைபெற்று [illegible]த பஞ்சாயத்துப் போர்டு ஆரம்ப பள்ளியும் 1942-ல் மூடப்பட்டுவிட்டது. அதுமுதல் பள்ளிக்கூடமே இல்லாமல் இருந்து வந்தது எங்கள் கிராமத்தில்.

"ராஜாஜியின் புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வந்த பிறகுதான் [illegible] மாதங்களுக்கு முன்னால் ஓர் ஆரம்பப்பள்ளி துவக்கப்பட்டது, எங்கள் ஊரில். அந்தப் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டதும் எங்கள் ஊரில் உள்ள 300 பிள்ளைகள் அதில் சேர்ந்தார்கள். ஆனால் பள்ளிக்கூடம் பணியாற்றத் தொடங்கியதும், ராஜாஜியின் புதிய [illegible] முறை அமுலுக்கு வந்திருக்கிறது என்றும், பாதி [illegible] என்றும், [illegible] பிள்ளைகள் [illegible] செய்யவேண்டும் [illegible] தெரியவந்தது. [illegible] இந்தக் கல்வி முறையை [illegible] பெற்றோர்கள் சிறிதும் [illegible] யால் தங்கள் பிள்ளைகள் முன்னேற முடியாது என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே அவர்களிற் பெரும்பாலோர், தங்களுடைய பிள்ளைகளை, புதிய திட்டம் அமுலில் உள்ள இந்தப் பள்ளியிலிருந்து நிறுத்தி, பழைய திட்டம் நடைமுறையில் உள்ள வெளியூர்ப் பள்ளிகளில் சேர்த்துவிட்டார்கள்.

"இதன் விளைவாக எங்கள் ஊர்ப் பள்ளியின் மாணவர் தொகை முதலில் 300-ஆக இருந்து இப்போது 120-ஆகக் குறைந்துவிட்டது.

"புதிய கல்வி முறையை எங்கள் ஊர்ப் பெற்றோர்கள் சிறிதும் விரும்பவில்லை. இந்த முறையால் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்புற முடியாது என்பது அவர்களுடைய கருத்து. ஆகவே இப்புது முறையை நிறுத்திவிட்டு பழைய முறைப்படியே கல்வி போதனையை நடத்த [illegible]' [illegible] ஜர். [illegible] [illegible] மகஜரைத் தந்து [illegible] பணிவுடன் வேண்டுகிறார்கள் கிராமவாசிகள்.

கற்பனை அல்ல இது. உண்மை நிகழ்ச்சி. வடார்க்காடு மாவட்டத்தில் உள்ளது திருமலைக்குப்பம் என்னும் கிராமம். அந்தக் கிராமத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் கட்டிடத் திறப்புவிழா நடைபெற்றது செப்டம்பர் 16-ம் தேதியன்று. திறப்பு விழா ஆற்ற வந்திருந்தார் வடார்க்காடு கலெக்டர் திருவாளர் சுகவனம் அவர்கள். அப்போதுதான் அவரிடம் மேற்குறிப்பிட்டபடி உள்ள மகஜர் ஒன்றைத் தந்து புதிய கல்வித்திட்டம் வேண்டாம் என்பதை அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள் திருமலைக்குப்பம் பெற்றோர்கள்.

சென்னை அரசாங்கமே! திரும்பிப் பார் திருமலைக் குப்பத்தை! புதிய கல்வித் திட்டம் முற்றிலும் பயனற்றது என்பதை இப்[illegible]வது உணர்ந்துகொள்! [illegible] உட[illegible]) [illegible] உத்தை!—என [illegible] நாட்டில் உள்ள நல்லறி[illegible] அத்தனை பேரும் கூற[illegible] ஏற்குமா அரசாங்கம் [illegible] மொழியை? ஏற்றால் [illegible] நல்லது. கல்வித்துறையி[illegible] காலத்துக்கும் [illegible]

[ஆரம்பக் [illegible]
(பாபய்ப) [illegible]
[illegible]

Bleed through.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்கு முறை!!

திராவிடநாடு

காஞ்சி] 18—10—53 [ஞாயிறு

வாடா மலர்!

★

பிள்ளாதுறை
தூக்கநாய்க்கன்பாளையம்
ஒசட்டி
பேரம்பலூர்
கும்மிடிப்பூண்டி
பட்டாபிராம்
மீஞ்சூர்
தாம்பரம்
பொன்னேரி
கோட்டையூர்
வீரக்கவுண்டனூர்
பெண்ணுகடம்
பாலமேடு
நக்கருகந்தன்பட்டி
ராஜாஜிநகர்
அரித்திரா நதி
வனவாசி
பென்காம் எஸ்டேட் (குன்னூர்)
மான்கூர் (பம்பாய்)
குட்வாசல்
மருவத்தூர்
ஊத்துக்குளி
மாரைங்கியூர்
பாலக்காடு
திமிரிக்காகாயல் (இலங்கை)
சூரப்பள்ளி
மாதுங்கா (பம்பாய்)
நன்னியூர்
காஞ்சிபுரம் (ராஜவீதி கழகம்)
கன்னிவாடி

*

"திராவிட முன்னேற்றக் கழகத்தை, தீர்த்துக் கட்டிவிட வேண்டும்"

"இப்படியா, போராட்டங்களை, ஆரம்பிப்பது? என் தலைமையிலிருந்தால், இன்னும், என்னென்னமோ, செய்திருப்பேன்!"

"ஜனங்கள், கலகலத்துப் போய்க்கிடக்கிறார்கள். அதுவும், இவர்கள் போராட்டம் துவக்கிய பிறகு, எல்லோரும் பயந்து கிடக்கிறார்கள்"

"அவ்வளவுதான்—தீர்ந்து போய் விட்டது, அவர்கள் கதை—தொண்டர்களைப் படாதபாடு படுத்திவிட்டார்கள்"

இவ்வண்ணம், 'நல்லுரை' வழங்கும், அரசியல் தலைவர்களின் பார்வைக்கு, மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலை வைக்கின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், சர்க்காரின் அடக்கு முறைகளைத் தாங்கி, தன் தலைவர்களைச் சிறைக்குள் அனுப்பிவிட்டு, தியாகத்தீயில் குளித்து எழுந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில், இருட்டு மதியினரும், குருட்டுக் கொள்கை கொண்டோரும், என்னென்னவோ, கூறத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அவசரக்காரர்களின், 'ஆருடம்', நாம் பிறந்தது முதல், பொய்த்து வருவதை, நாம், அறிவோம்.

இந்த ஆருடங்கணிப்பதில், முன்னேற்றக் கொள்கைகளை மேடையதிர முழக்கமிடும் சில கட்சிகளும் ஈடுபட்டுள்ளன, என்பதைக் கேட்கும் போது, அவர்கள் மீது பச்சாதாபமே உருவாகிறது—நமக்கு.

'முற்போக்குக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு ஐக்கியத்தை உண்டாக்கிக் கொண்டால்தான், இந்தியப் பாசீசத்தை எதிர்த்தொழிக்க முடியும்' என்று அந்தக் கட்சிகள் அன்பழைப்பு விடுத்தபோது, இருகை கொடுத்தோம் — எங்கும் ஆதரவு தந்தோம்.

இன்று நம்மீது அடக்கு முறை வீசப்படுவது போல்; அன்றோர் நாள், அந்தக் கட்சிகள் மீது ஆளவந்தார், துப்பாக்கிகளையும், விலங்குகளையும் நீட்டியபோது, மக்கள் மன்றத்தில் இந்தக் கொடுமைகளை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு வாதாடியது, தி. மு. கழகம்தான்.

இந்தப் பணிக்குப் பிரதி பிரயோஜனத்தைக்கூட அல்ல, நாம் எதிர்பார்ப்பது. செய்ந்நன்றி மறந்து, பித்தலாட்டப் பிரசாரத்தில் இவைகள் ஈடுபடுகின்றனவே என்று, உண்மையாகவே வருந்துகிறோம்.

"பாசீச வெறியர், நேரு!"—என்பர், பண்டிதரைப்பற்றி.

"ஆம்! அவர் சென்னை வருகிறார்—தென்னாட்டின் கண்டனத்தைக் கருப்புக் கொடி பிடித்துக் காண்பிப்போம்!" — என்று சொன்னால், இருக்குமிடம் தெரியாமல், சென்று விடுவர். "இது சரியோ?"—என்று, தத்துவார்த்தங்கள், கிளப்புவர்.

இத்தகைய அரசியல் 'வேட்டைக்காரர்'களின் சுய உருவத்தை, இது வரை, மக்கள் அறியாமலிருந்தார்கள். இதுபோது, நன்றாகத்தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான், மேலே குறிப்பிட்டபடி, பட்டியலைத்தர முடிந்தது, நம்மால்.

*

"பொதுச் செயலாளரை ஜெயிலில் தள்ளிவிட்டோம்."

"முக்கியமானவர்களையெல்லாம், பிடித்து அடைத்து விட்டோம்"

"எழுத யாரிருக்கிறார்கள். பேச யாரிருக்கிறார்கள்?"

"வெளியே வேலை செய்யத்தொண்டர்கள் இல்லாதபடி செய்து விட்டோம்"

"இதைத் தொடர்ந்து செய்தால், இந்தக் கழகத்தின், கணக்கை முடிவு கட்டிவிடலாம். நாடு, நம் வேட்டைக் காடுதான்"

"ஆமாம்! அதுவும் ஆந்திரா, பிரிந்துவிட்டதால் — தமிழகத்தில் இந்தக் கழகம் ஒன்றுதான், தலை தூக்கி நிற்கிறது"

"சரி! சரி!! ஒருகை பார்ப்போம்"

இவ்விதம், அன்றன்றாடம், ஆச்சாரியார் மாளிகையிலும், அவர்தம் தொண்டரடிப்பொடியாழ்வார் இல்லங்களிலும், உரையாடல் நடக்கிறதாம்.

தலைவர்களையும், பொறுப்பாளர்

ளையும், வருடக்கணக்கில் பூட்டி
ட்டால், திராவிட முன்னேற்றக்
ழகம் செத்துவிடும், என்று, இவர்
ர் 'ஆருடங்கணிக்கிறார்கள்'! இந்த
வலையில், நிதிமந்திரியான தோழர்
ப்பிரமணியம், வெகுவாக, ஈடுபட்
ருக்கிறாராம். தோழரின், அரசி
ல் வாழ்வை, அனைவரும் அறிவர்.
தைவிட, அவரது சொந்த வாழ்
வக் குறித்து, ஊரெல்லாம் இன்
ம் பேசுகிறது. இந்த நண்பர்,
ங்காங்கும், 'அங்காடிக்கடை'
ஷை, பேச முனைகிறார். வீரர்தம்
ாடமாம் விருதுநகரில் பேசிய
ாது, 'திராவிட முன்னேற்றக்
ழக நடவடிக்கைகளைச் சர்க்கா
க்காது' என்றாராம். சென்னைக்
ாட்டையில் பத்திரிகா நிருபர்
ிடம் உரையாடியபோது, "என்ன
வடிக்கை எடுப்பதென்று சர்க்
ர் யோசித்துக்கொண்டிருக்கி
" என்று வெளியிட்டாராம்.

விவேகத்துக்கும் அவருக்கும்
குதூரம் என்பதை, நிரூபித்
ருக்கிறார், இந்த நிதியமைச்சர்.

இனி என்ன நடவடிக்கை எடுப்
?—துப்பாக்கி முழக்கம்! பிண
! சிறைச்சாலை! வழக்கு! ஜப்தி!!
இத்தனையும்தான், எடுத்தாகி
டதே. இனி, என்ன, எடுப்
ாம்!

இதனை, எவரும் கேளார் ஊனும்
ணியில், செப்பியிருக்கிறார்
ாழர்.

தூத்துக்குடியிலும், கல்லக்குடியி
மாண்ட தியாகிகளின் சார்
அவரை, மன்னிப்போம்—
ம், அரசியல் தியாகம் அறியாத
ன, அது!

*

வளர்ந்து வரும் முற்போக்கு
க்கங்களுக்குள்ள முக்கிய குணதி
, அடக்குமுறை பாயப்பாய,
த இயக்கங்கள், முன்னேறிக்
ண்டே செல்லும்.

தனால்தான், அடக்கு முறைக்
ம்வந்துவிட்டதென்றால், எங்
கொள்கைகளுக்காக இழி
லும் பழியும் ஏந்திப் பாடு
னரோ அந்த மாவீரர்கள்,
மகிழ்ச்சிக்கொள்வர். தமது
சிய யாத்திரை, சுருங்கிவிட்ட
, தாங்கி முழுக்கு வீரர்.
மாவீரர்களை, வேட்டுச்சப்த

முழம், தடியடியும், விலங்கு பூட்டு தலும்—வீழ்த்திவிடாது. இந்தச் சம்பவங்களை, நண்பர் சுப்பிரமணியன், மறந்துவிட்டார். நம்மையும் நம் தலைவர்களையும் நன்றாக அறிவார், இந்தக் கோவை வக்கீல். குலகுபட்டரின் நேசம், குதர்க்கப் புத்தியை வளர்க்கிறதும்போலும். பாபம், மன்னிப்போம்.

"தி. மு. கவை வளரவிடோம்!"—என்று செப்புகின்றனரே இந்த 'சிந்தையிழந்தார்'கள், அவர்கள் பார்வைக்காகத்தான், தலைப்பிலிருக்கும் பட்டியலை வைக்கிறோம்.

முப்பது இடங்களில்! — திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், முகிழ்த்திருக்கின்றன.

எப்போது தெரியுமா?—கடந்த ஜூலை 14-ந்தேதிக்குப்பின்!

எந்த மும்முனைப் போராட்டங்களை, 'சிந்தையிழந்தார்கள்' கேலி செய்கின்றனரோ, அந்தப் போராட்டங்களுக்குப் பின்னர்தான், இவ்வளவு கழகங்களும் உண்டாகியிருக்கின்றன.

"ஐயயோ! அந்தக் கழகம், சர்க்காரை எதிர்க்கும்! கழகம்"

"அந்தக் கழகத்தில் சேர்ந்தால் துப்பாக்கியால் சுடுவார்களாம் — கைகால்களை ஒடிப்பார்களாம்— சிறைக்குள்போடுவார்களாம்"

"அந்தக் கழகத்தை ஒழித்திடப் போவதாக ஆச்சாரியார் சொல்கிறார் — ஆகவே, நாம், அதன் பக்கமும் நெருங்கக் கூடாது"

இவ்வித பயமும், கிலேசமும், நம்மைப்பற்றி, மக்கள் மன்றத்தில் இருந்திருந்தால், இந்தப் புதுக் கழகங்கள், எப்படிப் பூத்திருக்க முடியும்?

இருக்கும் கழகங்களில் பல கலைந்திருக்கும்! மாவீரர்களில் பலர் மறைவிடம் தேடியிருப்பர்!!

அந்நிலையில்லை—மாறாக, புதுக் கழகங்கள் முரசு கொட்டுகின்றன.

ஆச்சாரியார், செல்லுமிடந் தோறும் நம்மைப் பற்றிக் கூறுகிற 'இந்தவாரத்திய' உபமானச் சொல், 'நல்ல பாம்பு' என்பதாகும். நாம், 'நல்ல பாம்பு' என்றால், நத்துவரோ, மக்கள்? கிராமத்தாரும், நகரத்தாரும் போட்டி போட்டுக்கொண்டன்றோ, புதைத்திருப்பர்.

மாறாக பூரிக்கிறார்கள், இன்று—'நான ஒரு தி. மு. க. தோழன்' என்று சொல்லிக் கொள்வதில்.

திருச்சி சிறையிலே வதியும் தோழர்கள் மு. கருணாநிதி, முல்லை. சத்தி, குமரவேல், குழந்தைவேலு முதலியோரோடு கஸ்தூரி ராஜா என்ற பெயர்கொண்ட காளையொருவரும் இருக்கிறார்—திருச்சி மாவட்டவாசி, முன்னாள் காங்கிரஸ் எம். எல் ஏ. யின் குமாரர்.

அவரை கழகத்துக்கு இழுத்து வந்தது, கல்லக்குடி அறப்போராட்டம்தான்.

அவர் போல, நமது அறப்போராட்டங்களின், நீதியையும் நேர்மையும் கண்டு தி. மு. க. கூடாரத்துக்குள் வந்து சேர்ந்துகொண்டிருப்போர், தொகை ஏராளம்.

இத்தகைய நம்மைத்தான், ஒழிக்கப் பார்க்கப் போகிறாராம், ஊராளும் அமைச்சர். அவரிடத்திலிருந்தபடி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த, தோழர் அவினாசிலிங்கம், இருக்குமிடம் தெரியவில்லை இன்று. அவருக்காவது, சில கொள்கைகள் உண்டு. அது கூட இல்லாத இந்த 'அசட்டுத்தைரியக்காரர்', ஆர்ப்பரிக்கிறாராம். பாபம், மன்னிப்போம்.

பூத்திடும் புதுக்கழகங்களின் பட்டியல், அடிக்கடி, 'நம்நாடு' இதழில், வெளிவந்தபடி இருக்கிறது.

இது, பொதுமக்கள், நம்பால், காட்டிவரும் அன்பின், அளவு.

இந்த அளவினை வளர்த்திடும் முயற்சியில் ஆங்காங்குள்ள தோழர்களும், ஈடுபடவேண்டுமென்று, விரும்புகிறோம்.

புலியை வீழ்த்திவிட்டோம் என்று பூசுரர் பூரிப்புக்கொள்கிறார்.

நமது பொதுச் செயலாளர்களையும் முன்னணி வீரர்களையும் சிறைக்குள் பூட்டிவிட்டால், க. மு. கவேலைகள் அஸ்தமித்துவிடும் என்று கனாக் கண்டனர், அவர்கள்.

அதனால்தான், ஆறு மாதம்! மூன்று மாதம்!—என்று, விசித்திரமான செக்ஷன்களையும் வீசப்பட்டன.

தடியடியும், வேட்டுச் சப்தமும், விலங்கு பூட்டுதலும், வேக வேகமாக நடத்தப்பட்டன.

இவைகளைக் கண்டு புன்சிரிப் போடு, கழகம் புதுநடை போடுவதைக் கண்டதும், செய்வகை தெரியாது, திகைக்கிறார்கள்.

"கழகத் தலைவர்கள் சிறையில் கிடக்கிறார்கள். காரியங்கள் நடைபெறுவது எதுவும், தடைப்படவில்லையே!"

"கல்லக்குடியில் சுட்டோம் — இன்றும் கல்லக்குடி போராட்டம் நடைபெறுகிறதாமே!"

"அண்ணாதுரையை அடைத்தோம் — அவரை ஆசிரியராகக் கொண்டு 'ஏடுகள்' வெளிவந்தபடி உள்ளனவே!"

"நெடுஞ்செழியனையும், நடராசனையும் பூட்டினோம் — 'மன்றமும்' 'திராவிடனும்' வழக்கம்போல் வருகின்றனவே!"

"மதியழகன் இல்லாமலிருந்தும் தலைமைக் கழக வேலைகள் தங்குத் தடையின்றி நடைபெறுகின்றனவே!"

"கருணாநிதியைப் பூட்டினோம்— சிவசாமி, தங்கப்பழம், நடராசன், சாமி ஆகியோரை அடைந்தோம். எனினும் தினசரி, நாடெங்கும் 'கருணாநிதிக்குரல்' கேட்கிறதாமே"

இவ்விதம், ஆதிக்கபுரியில் ஆச்சரியமும் அச்சமும் ஆட்டிப்படைக்க ஆரம்பித்துவிட்டன.

அதனாலேயே நம்முடைய தோழர்களாக இருக்கவேண்டியவர்களையும் நமது 'மாஜிகளை'யும் தூண்டிவிடும் துயர்ப்பணியில் ஈடுபடுகிறார், தோழர் ஆச்சாரியார்.

கழகத் தலைவர்கள் உள்ளே இருக்கிறார்கள்—எனினும்,

> நாடெங்கும் கருப்புக்கோடி காட்டி வருகிறோம்.

கழகத் தொண்டர்கள் ஏராளமாக சிறைக்குள் கிடக்கிறார்கள் — எனினும்,

> கடந்த ஒரு மாதகாலமாக சேன்னை நகரில் தினசரி, விடாமல் 144-ஐ மீறி கூட்டங்கள் நடத்தி வருகிறோம்.

கழக முன்னணி வீரர்கள், வழக்குகளில் அகப்பட்டும், சிறைக்குள் பூட்டப்பட்டும் கிடக்கிறார்கள்— எனினும்,

> ...தினசரி பல ...புதுக்கழகங்கள் ... நம் ... கேட்கிறது.

இந்தக் காரியங்கள் முன்னைவிட சிறப்பாக புதுமுறுக்கோடு, நடைபெறுகின்றதற்குக் காரணம், நம்முடைய கொள்கையின் ஜீவசக்தியும், அதற்காகப் பாடுபடும் நம்முடைய தன்னலமற்ற தியாகசிந்தையும் என்பதை, இந்தத் 'தர்பார்காரர்கள்' உள்ளத்தில் உரைக்கிறது-அதனால் தான், உறுமுகின்றனர்-குலைக்கின்றனர். பாபம், மன்னிப்போம். இன்றில்லாவிடினும் என்றாவது, அவர்களுக்கு, இன்ப வாழ்வுதரப் போவது நாம்தான்! அந்த நாளை எண்ணி நடப்போம்!! நமது கடமைகளைச் சரிவரச் செய்வோம்!!!

புதுக்கழகங்கள், பூக்கட்டும்-இந்த மிரட்டல் கூட்டத்தின் கண்கள் திறக்கட்டும்.

ஒரு பொறுப்பான பணி

இப்பொழுது ஒரு பெரிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலேயே திருத்தம் ஏற்பட்டதற்கு மன்னிக்கவும். பொறுப்பு தானாக ஏற்படவில்லை. ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொறுப்பும் லேசானதல்ல. மிகவும் கஷ்டமானது. எண்ணெய் தடவின கம்பத்தில் ஏறுவது போன்ற கஷ்டமான பொறுப்பு. பொறுப்பு என்னவோ கஷ்டமென்று சும்மா இருந்துவிடக் கூடாது. எப்படியாவது செய்தாக வேண்டும். சும்மா இருந்த கம்பத்தில் எண்ணெயைத் தடவிவிட்டு ஏறச் சொல்கிறீர்களே என்று கேட்கக்கூடாது. எண்ணெயைத் துடைத்துவிட்டு ஏறுகிறோமென்று கூடச் சொல்லக்கூடாது. எண்ணெயைத் துடைத்து விட்டால் கம்பத்தின் பளபளப்புப் போய்விடும். ஆகையால் எண்ணெயும் கம்பத்தில் அப்படியே இருக்க வேண்டும் — ஏறவும் வேண்டும். எப்படி ஏறமுடியுமென்று கேட்கக்கூடாது.

*

இப்படியொரு பெரும் பொறுப்பை இப்பொழுது ஆச்சாரியார் காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

என்ன அப்படிப்பட்ட பொறுப்பு?

கண்டுபிடித்தல்!

எதைக் கண்டுபிடிப்பது? ... நன்மைகளை! ... யார் செய்த நன்மைகளை? ... சர்க்கார் செய்யும் ...

ஏன்?

பொது மக்களுக்குக் கூற!

நாம் கண்டுபிடித்துக் கூறாவிட்டால் தெரியாதா?

தெரியாது.

சர்க்கார் செய்த நன்மைகளை எப்படிக் கண்டு பிடிப்பது?

தேடி!

எப்படித் தேடுவது?

இதுகூடத் தெரியாதா?

தெரியாதே!

முன்பிருந்த சர்க்காரின் குறைகளைக் காங்கிரஸ்காரர்கள் தேடித் தேடி எடுத்தமாதிரி, இப்பொழுதும் காங்கிரஸ் சர்க்கார் செய்கின்ற நல்ல காரியங்களைத் தேடித் தேடி எடுக்க வேண்டும்.

இப்படியொரு உரையாடல், ஆச்சாரியாருக்கும் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் இடையே நடந்ததா என்று தான் யாருக்கும் கேட்கத் தோன்றும். ஆனால், இது, உரையாடல் முறையில் நடக்கவில்லை. ஆச்சாரியாரே இவ்விதம் பேசியுள்ளார்.

"அந்தக் காலத்தில் காங்கிரஸைப் பற்றிக் காங்கிரஸ்காரர்கள் பொது ஜனங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். இப்பொழுது காங்கிரஸ்காரர்களுக்குப் பொது ஜனங்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள். அசுப்பூ ... வல்லமை ... இன்... போல் ... ஜனங்கள் ... குறை... சொல்லிக் ... செய்கிறார்கள். ...

தேடி எடுத்த மாதிரி இப்பொழுதும் சர்க்காரில் நல்ல காரியங்களைத் தேடித் தேடி எடுக்க வேண்டும். சர்க்கார்செய்யும் நன்மை தெரியாது. வரி போட்டுச் சர்க்காரை நடத்தினால் குறைகளைச் சுலபமாகசொல்லுவார்கள். நல்ல காரியமாக ஒன்றைச் செய்தால் தெரியாது. உதாரணமாக ரோடு போடலாம். பத்து நாட்களுக்குத் தெரியும். பிறகு மறந்துவிடும். அது தெரியாது. ஆகையால் நன்மைகளைக் கண்டு பிடித்து ஜனங்களுக்குச் சொல்ல வேண்டும். தகப்பனிடத்தில் பையனுக்குள்ள மரியாதையுடன், பயம் இருப்பது போல், ஆண்டவனிடத்தில் மக்களுக்குள்ள பயபக்தி போல் சர்க்காரிடத்தில் மக்களுக்கு பயபக்தியை உண்டு பண்ண வேண்டும்.

இந்த கஷ்டமான வேலை காங்கிரஸ்காரர்களுக்குஏற்பட்டிருக்கிறது. என்ன கஷ்டம் என்று கேட்கலாம். சாதாரணமான கோலைப்பிடித்துக் கொள்வது சுலபம். எண்ணெய் தடவின கம்பத்தில் ஏறு என்றால் கஷ்டம். இது கஷ்டமானதாக இருந்தாலும் காங்கிரஸ்காரர் இந்த வேலையைச் செய்ய வேண்டும்”

என்று 6—10—53-ல் திருப்பூரில் பேசியபொழுது குறிப்பிட்டுள்ளார். முன்பெல்லாம் காங்கிரஸ்காரர்களைப்பற்றிக் காங்கிரஸ்காரர்களே பொதுமக்களுக்குக் கூற வேண்டியிருந்ததாம். இப்பொழுது நிலைமை மாறிவிட்டதாம். பொதுமக்கள் காங்கிரஸ்காரர்களுக்கு விஷயங்களைச் சொல்லிக்கொடுக்கிறார்களாம். சொல்லிக்கொடுக்கிறார்கள் என்றால், காங்கிரஸ்காரர்கள் செய்யும் தவறுகளை, கம்பாசிட்டர்கள் வல்லினம் இடையினம் மெல்லினங்களை இடமறிந்து திருத்திக்கொள்வதுபோல், திருத்துகிறார்கள் என்று ஆச்சாரியார் கூறுகிறார். சாதாரண பொதுமக்களுக்குத் தெரியக்கூடிய தவறுகள்கூட ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் சர்க்காருக்குத் தெரிவதில்லையாம். மலையளவுக்குத் தவறுகளைச் செய்துகொண்டிருக்கும் ஒரு சர்க்கார், தப்பித் தவறி ஏதாவதொரு நன்மையைச் செய்தால், அந்த நன்மை கடுகளவுக்குத்தான் ஒப்பிட முடிகிறதாம். எனவேதான், மலையளவு தவறுகளுக்கிடையே மறைந்துகிடக்கும் கடுகளவு நன்மையைத் தேடித் தேடிக் கண்டுபிடித்துப் பொது மக்களுக்குக் கூறும்படி காங்கிரஸ்காரர்களை ஆச்சாரியார் கேட்டுக் கொள்கிறார் காங்கிரஸ் சர்க்கார்செய்யும் நன்மைகளைக் கண்டுபிடித்துக் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு அவர் நிற்கவில்லை. அந்தப் பெரிய பொறுப்போடு இன்னுமொரு கஷ்டமான வேலையையும் செய்யச் சொல்கிறார். தனயன் தந்தைக்குக் காட்டும் மரியாதை, பயம்போலவும், ஆண்டவனிடத்தில் மக்கள் காட்டும் பயபக்திபோலவும் காங்கிரஸ் சர்க்காரிடத்தில் பொதுமக்கள் பயபக்தியாக நடந்துகொள்ளும்படி செய்ய வேண்டுமாம்.

தனயன், தந்தையிடம் மரியாதையாக நடக்கத் தவறினால் என்ன ஏற்படும்? தந்தை நல்லவராக இருந்தால், “பிள்ளை ஏதோ தவறாக நடந்துவிட்டான்” என்று கருதி மன்னித்துவிடுவார். தந்தை கோபக்காரனாக இருந்தால், “என்னிடம் மரியாதையாக நடக்கத் தெரியாத பிள்ளைக்கு என்னுடைய சொத்தைக் கொடுக்கமாட்டேன்” என்று கூறி, தானே அந்தச் சொத்தைத் தும்சப்படுத்தி விடுவான் அல்லது வேறு யாருக்காவது எழுதிவைத்து விடுவான். ஆனால் ஆண்டவனிடம் பயபக்தியாக நடக்கத் தவறினால் என்ன ஏற்படும்? நரகம்!

எனவே, காங்கிரஸ் சர்க்காரை யாருக்கு ஒப்பிடுவது? தந்தைக்கா? ஆண்டவனுக்கா? தந்தைக்கென்றால் அது பொருந்தி வாராதே! தந்தையின் சொத்துத் தனயனுக்குச்சேருவதுபோல், காங்கிரஸ் சர்க்கார் என்ற தந்தையின் சொத்து,பொது மக்கள் என்ற தனயர்களுக்குச் சேர வேண்டுமல்லவா? அப்படியானால் காங்கிரஸ் சர்க்கார் என்ற தந்தையிடம் சொத்திருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. அப்படி ஏதாவது சொத்து இருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றுமே கிடையாதென்று தெளிவாகத் தெரிகிறது. பொதுமக்கள் என்ற புதல்வர்கள் தான் காங்கிரஸ் சர்க்கார் என்ற தந்தையின் அன்றாடச்செலவுக்குவேண்டியதை அவ்வப்போது கொடுத்து வருகிறார்கள். அதாவது, பொது மக்கள் தரும் வரிப்பணத்தைவைத்துக்கொண்டு சர்க்கார் தன்னுடைய வாழ்க்கையை நடத்தி வருகிறதென்று பொருள். அதுவுமன்றி ஜனநாயகம்பற்றிப் பேசுபவர்கள், சர்க்காரைப் பிள்ளை நிலையிலும், பொதுமக்களைத் தந்தை நிலையிலும் வைத்துப் பேசுவது வழக்கம். அதாவது, பொதுமக்கள் எஜமானர்கள் — சர்க்கார் பணியாள் என்று சம்பிரதாயத்துக்காகவோ அல்லது உண்மையாகவோ கூறப்படுகிறது. ஜனநாயக ஆட்சி என்பதற்கு ஜனங்களை நாயகர்களாக அதாவது தலைவர்களாகக்கொண்ட ஆட்சி என்று தான் பொருள். ஆகையால், தந்தைக்கு மகன் மரியாதை காட்டி நடப்பதுபோல், காங்கிரஸ் சர்க்கா

தி. மு. க. தலைமை நிலைய ஆங்கில வெளியீடு

ஒவ்வொருவர் கையிலும்

இருக்கவேண்டிய ஆங்கில நூல்

The Answer

விலை 6 அணா

அண்ணா, மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், என். வி. நடராசன்

ஆகியோர்

நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலங்கள்

விபரம்:- பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.

ருக்குப் பொதுமக்கள் மரியாதை காட்டி நடக்கத் தேவையில்லை. எனவே, இந்தக் கஷ்டமான பணியில் காங்கிரஸ்காரர்கள் இறங்கிக் காலத்தைக் கழிக்கவேண்டா மென்று ஆச்சாரியாரின் சார்பில் நாம் கூறுகிறோம்.

இனி, ஆண்டவனிடத்தில் மக்கள் பயபக்தியாக இருப்பதுபோல், காங்கிரஸ் சர்க்காரிடத்திலும் மக்கள் பயபக்தியாக நடந்துகொள்ளும்படி காங்கிரஸ்காரர்கள் செய்ய வேண்டுமென்று ஆச்சாரியார் கேட்டுக்கொள்வதும் அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. எப்படியென்றால், ஆண்டவனிடத்தில் மக்கள் பயபக்தியாக நடக்கத் தவறினால் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று கடவுளின் இலக்கணம் கூறும் காவியங்கள் காலட்சேபம் செய்கின்றன. அதுவுமின்றி, ஆண்டவனிடத்தில் பயபக்தியாக நடப்பவன் எப்படி இருக்கவேண்டுமென்பதற்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அதாவது, குளித்து, தூய ஆடை அணிந்து, நீறோ, நாமமோ இட்டு, இடுப்புக்குமேல் துணி கட்டாமல், கை கட்டி வாய் பொத்தி, காதுகளைக் கைகளால் மாறிப் பிடித்துத் தோப்புக்கரணம் போட்டு, "அடியேனைத் தேவரீரின் பாதாரவிந்தங்களில்சேர்ந்தருளும்" என்று பயபக்தியோடு வழிபடுதலையே ஆண்டவனிடத்தில் பயபக்தியாக நடப்பது என்று புராணங்கள் கூறுகின்றன. ஆண்டவனை வழிபடுவதற்கு இன்னொரு முறையும் கூறப்படுவதுண்டு. அதனை அறிவு நூல்களில் காணலாம். அதாவது, அன்பினால் ஆண்டவனை வழிபடுவது. இதனையொட்டியே "அன்பே கடவுள்" என்றும் கூறப்படுவது. அன்பினால் ஆண்டவனை வழிபடும் முறைக்கும், பயபக்தியினால் ஆண்டவனை வழிபடும் முறைக்கும் பெருத்த அளவில் வேறுபாடு உண்டு. அன்பால் ஆண்டவனை வழிபடுபவனுக்குத் தூய ஆடையோ, துளசி மணியோ, நீற்றுப்பூச்சோ, நாமக் கோடோ தேவையில்லை. இவை பயபக்தி வழிபாட்டுக்குத்தான் தேவை. அன்பால் ஆண்டவனை வழிபடுபவன் அவருடைய பாதாரவிந்தங்களை அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு வழிபடுவதில்லை. மற்றவர்களிடத்தில் அன்பாய் இருப்பதுபோல், ஆண்டவன் என்று ஒருவர் இருந்தால், அவரிடத்திலும் அன்பாயிருக்க வேண்டுமென்ற அளவில் தான் ஆண்டவனை வழிபடுகிறான். அன்பால் ஆண்டவனை அர்ச்சிப்பவன் பிரதி பலனை எதிர்பார்ப்பதில்லை. பயபக்தியால் ஆண்டவனைத் தொழுபவன் பிரதி பலனை எதிர்பார்க்கிறான். ஆகையால், அன்பு வழிபாட்டுக்கும் பயபக்தி வழிபாட்டுக்கும் பெருத்த வேறுபாடுண்டு. அதுவுமன்றிக் காங்கிரஸ் சர்க்காரை ஜனநாயக சர்க்கார் என்று காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு ஜனநாயகத்தில் இருக்கும் ஆர்வத்தால் சொல்லிக்கொள்கிறார்கள் என்று வைத்துக்கொண்டு பார்த்தாலும், காங்கிரஸ் சர்க்காரிடம் பயபக்தியுடன் நடந்துகொள்ளக் கூடாது. பயபக்தி ஜனநாயகத்தின் எதிரி. எனவே, காங்கிரஸ் சர்க்காரிடம் பயபக்தியுடன் பொது மக்கள் நடந்துகொள்ளும்படி செய்ய வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களை ஆச்சாரியார் கேட்டுக் கொள்வது அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் சர்க்காரிடம் அன்பாய் நடந்துகொள்ளும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டாலாவது அது ஓரளவுக்குப் பொருத்தமாக இருக்கும். ஆனால், பயபக்தி!! இதை நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது. பயபக்தியில் தவறு ஏற்பட்டால் என்ன கிடைக்கும் என்பதை நினைக்கும் போதே நெஞ்சு நடுங்குகிறது. நரகம்! இது தானே அதற்குப் பரிசு! வேண்டாம் இந்தப் பயபக்தி. வேண்டுமானால், காங்கிரஸ் சர்க்காரிடம் அன்பாய் நடக்கும்படி ஆச்சாரியார் தன்னுடைய சீடகோடிகளுக்குக் கட்டளையிடட்டும். மற்றவர்களையும் அன்பாய் நடக்கும்படி செய்யட்டும். ஆனால், பயபக்தி மட்டும் வேண்டாம். அது ஜனநாயகத்தை வேரோடு களைந் தெறியக் கூடியது. எனவே காங்கிரஸ்காரர்கள் இந்தக் கஷ்டமான பணியிலும் ஈடுபடத் தேவையில்லை என்று ஆச்சாரியார் சார்பில் கூறுகிறோம்.

இனி, ஆச்சாரியாரின் முதல் கட்டளையாகிய அந்தக் கண்டு பிடிப்பு வேலையைக் காங்கிரஸ்காரர்கள் தாராளமாகச் செய்யட்டும். வேண்டுமானால், இந்தத் துறையில், காங்கிரசின் முதல் நம்பர் எதிரிகளான எங்களின் உதவியும் கிடைக்கும்படி செய்கிறோம். அதாவது, காங்கிரஸ் சர்க்கார் என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கிறதென்ற புள்ளி விபரங்களைச் சேகரித்துத் தருகிறோம். அதே சமயத்தில் காங்கிரஸ் சர்க்கார் செய்கின்ற கொடுமைகளின் புள்ளி விபரங்களையும் சேகரித்துத் தருகிறோம். காங்கிரஸ் தோழர்கள் இரண்டையும் எடை போட்டுப் பார்த்து, நம்மை எப்போதாவது சந்திக்க நேர்ந்தால்—நேரும் என்ற நம்பிக்கையோடும் நல்லெண்ணத்தோடும் இருப்பவர்கள் நாம்—எனவே அப்போது நல்லது கெட்டது என்ற இரண்டில் எது அதிகம் என்பதை மட்டும் கூறத் தவறக் கூடாதென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்வதோடு, ஆச்சாரியார் அறிவித்துள்ள பொறுப்பான பணியை உடனடியாகத் தொடங்கும்படியும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

குறைகள் நீடிக்கின்றன

காங்கிரஸ் ஸ்தாபனம் பற்றி பலர் குற்றங் குறைகளை எடுத்துக் கூறுவர். பல குறைகள் இருக்கலாம். இல்லை என்று கூற முடியாது. ஜனநாயகத்தில் பல குறைகள் இருக்கின்றன. இருந்தாலும் ஜனநாயக ஆட்சி நிலைபெற்றிருக்கிறது. ஜனநாயகம் நீடிக்க முடியாது என்று யாராவது கூற முடியுமா? எந்த பெரிய ஸ்தாபனத்திலும் குறைகள் உண்டு.

காங்கிரஸில் குறைகள் இருந்தன. அந்தக் குறைபாடுகள் நீடிக்கவும் செய்கின்றன. தலைவர்கள் சண்டையிட்டால், வழியர்கள்பாடு திண்டாட்டமாய் விடுகிறது.

—நேரு (5-10-59)

கல்லறையிலிருந்து!

ஆச்சாரியார் அவர்களே!

தேனாம்பேட்டை மைதானத்தில், நீர், செப்பிய வாசகங்களைக் கேட்டேன் — சிந்தை குளிர்ந்தேன். 'செத்துப்போய்விடுமோ, என் கொள்கைகள்?' என்று சிந்தாகூலம் கொண்டிருந்த, என் செவிகளுக்கு; செந்தேன் ஊற்றிற்று.

இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது — அதிலும், அந்தச் சுதந்திரம் உங்கள் கையில் சிக்கிவிட்டது என்று கேட்டதுமே என் உள்ளத்தில், சிறிது தெம்பு, ஏற்பட்டது. உங்களைப் போன்றோர், ஊராளும் முறைகளைப்பற்றிக் கேள்விப்படும்போதெல்லாம், 'உண்மைதான்!' என்று உவகை கொள்வேன். அதிலும், தாங்கள், சென்னையின் முதலமைச்சராக பதவியேற்ற விபரம் அறிந்தபோது, நானடைந்த பரவசத்துக்கு அளவில்லை. ஆனால், அதற்குப் பிறகு, நீர் சென்று கொண்டிருந்த போக்கு எனக்குப் பயத்தைக் கொடுத்தது. எங்கே சென்றாலும், 'எதிர்க்கட்சிகளுக்கு' மரியாதை கொடுப்பதாகவும், எல்லோரிடத்தும் பவ்யமாக நடப்பதாகவும் கேள்விப்பட்டேன்—கிலேசம் கொண்டேன். இது, நம்முடைய பாதையன்றோ! தவறிவிடுவாரோ?—எனும் அச்சமே, அதற்குக் காரணம். அருகிலிருக்கும் என் தோழன் முசோலினி மட்டும் எனக்குத் தைரியம் தந்துவந்தான்—நீர் அப்படியெல்லாம் போகமாட்டீர், என்று. எதிர்க்கட்சியினரை தாஜாசெய்து, அதிகார வண்டி செல்ல பாதையைச் சரிசெய்து கொண்டிருப்பதாக, அறிந்தேன். உமது முறை, புரிந்தது — எனக்கு. பூரித்தேன்! உம்மை, எதிர்த்தவர்களாமே, சில காங்கிரஸ் தொண்டர்கள்—அவர்களை நீர், சமாளித்த விதம், மிகமிகச் சாமர்த்தியமானதுதான். அந்த விஷயத்தில், நீர், என்னையும் மிஞ்சி விட்டீர்—என்னருகேயிருந்த கோயரிங், கோயபெல்ஸ் ஆகியோரைக் கண்டால், நான் எவ்வளவு அஞ்சுவேன் தெரியுமா? ஆனால், உமக்கு அந்த அச்சமும் இல்லாமற் போய்விட்டதே! அவர்களைப் பார்த்து, 'துடைப்பக்கட்டை' என்றீராம் — அதுவும் 'தேய்ந்துபோன துடைப்பக் கட்டை' என்று அழைத்தீராம் அசகாய சூரன்தான், நீர்! யாருக்கு வரும், இத்துணிச்சல்? தட்டிக் கேட்கக்கூடிய, 'தளபதி'களுக்கு இந்தப் பட்டம் சூட்டிய நீர், என்னையும்மிஞ்சி, இன்னொன்று புகன்றீராம் — அதுபோல நான் கூடச் சொல்ல அஞ்சினேன் — ஆனால், ஆங்கிலேய நாட்டிலிருந்த சார்லஸ்போன்ற அரசர்கள்மட்டுமே அவ்விதம் சொல்லியதாக சரித்திரத்தில் படித்திருக்கிறேன்—நீரோ, மன்னரல்ல! என்னைப்போல வசதிகளும் பெற்றவரல்ல!! எனினும், 'மகாஜனங்களே! நான்தான் ஆண்டவன்' என்றீராம். எவ்வளவு துணிவய்யா, உமக்கு? அவ்விதம் பேசியபடியே, 'அடியார் கூட்டம்' ஒன்றையும் சேர்த்துக்கொண்டீராம். நல்ல யோசனை — 'திருவந்தாதி' பாட எப்பொழுதும், இதுபோன்றோர், நமக்கெல்லாம், தேவைதான். திருவடியார்களைச் சேர்த்ததுமட்டுமின்றி, அவர்களை நீர், பெயர் வைத்து அழைத்த முறையிருக்கிறதே, அதைக் கண்டு எனக்கு ஒரே ஆச்சரியம்! மிகத் தைரியசாலித்தானய்யா, நீர்—அவர்களை 'அனுமார்களே!' என்றும், 'விபீஷணர்களே!' என்றும் அழைத்தீராமே. அதைக் கேள்விப்படும்போது, இங்கிருக்கும் ஹூயிகூடத் திகைத்தார். என்னைச் சுற்றியிருந்தோரை, நான் இவ்விதம் சொல்லத் துணிந்ததேயில்லை—ஏனெனில், அவர்கள் என்னை அதே வினாடியில் 'கல்தா' கொடுத்திருப்பார்கள், என்பதால். ஆனால் உமக்குக் கிடைத்த அடியார் கூட்டம், மிக மிக அலாதியான தினுசுபோலிருக்கிறது! அடியாரின் புகழ்மாலை பெறத் துவங்கியதும் உம்மை எதிர்த்த உமது எதிரியாம் காமராஜரை, ஏறெடுத்துப் பார்த்தீராம். பார்க்கவேண்டிய ஆசாமிதான், அந்த ஆளும் கட்சி — ஜனநாயகம்—அது இது — என்று, அந்த ஆளைச் சுற்றியிருக்கும் கூட்டம் ஒன்று 'பேரிகை' கொட்டுகிறதாமே. செச்சே! நம்மைப்போன்றோரை வளர்த்துவிட்ட பிறகு, அந்தக் கட்சிகள் யாவும் நமக்குத் துதிபாடவேண்டுமே தவிர, இதையெல்லாமா, பேசுவது? நீர், என்ன செய்வீரோ, என்று பயந்தேன்! சரியான போடு போட்டீர் — 'இப்படியெல்லாம் பேசினால் உங்களுக்கு இனாமளித்த 'ஐந்து ஏகர்' நிலத்தையும் பிடுங்கிக்கொள்வேன், என்பதாக. அப்புறம், அவர்கள் குரல் ஓரளவு அடங்கிவிட்டதாகவும் அறிந்தேன்.

நீர் நடத்திவரும் ஆட்சியைப்பற்றியும் அடிக்கடி விசாரிப்பதுண்டு—யாரார் வேண்டியவர்களோ, அவர்களையே உம்மைச் சுற்றியும்—உமது ஆட்சியைப் பாதுகாக்கவும், உத்தியோகத்தில் அமர்த்தினீராம். அருமையான செயல் அது! அப்படிச் செய்தால்தான், அதிகாரம் ஆடாமலிருக்கும்!! கடைசியாக நீர் கொண்டுவந்த 'கல்விபற்றிய திட்டம்' என் கவனத்தை மிகக் கவர்ந்தது. இதுபோன்ற திட்டத்தை, நான் கூட, கொண்டுவரவில்லை. ஆனால், நீர், துணிந்து செய்திருக்கிறீர்! அப்பப்ப — உம்முடைய துணிச்சலை எப்படித்தான் பாராட்டுவேன்? அந்தக் கல்வித் திட்டம்பற்றி கடல் அலையென மக்கள் எதிர்ப்பு உருவாயிற்றாமே!! இந்த ஜனங்களை எதிர்க்கும் துணிவு எல்லோருக்கும் ஏற்படாது — நம்மைப்போன்றவர்களுக்குத்தான் ஏற்படும். அதிலும் சட்டசபையில் நீர், தோற்கடிக்கப்பட்டபோது, நடந்துகொண்ட முறை இருக்கிறதே, அது என்னை மிக மிகக் கவர்ந்தது. ஆனால், உடனே ஒன்று நீர் செய்திருக்கவேண்டும்! உடனடியாக உம்மை எதிர்த்த சட்டசபை எம். எல். ஏ.க்களையெல்லாம் சிறைக்குள் பூட்டியிருக்கவேண்டும். அப்போதுதான், அவர்களுக்கு, நம் கையிலிருக்கும் அதிகாரம் தெரியும். நீர், அப்படிச் செய்யாததைக் கண்டு, 'இவர்கூட ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுக்கிறாரோ?' என்று சந்தேகப்பட்டேன். ஆனால், பிறகு அறிந்தேன்—அந்த எம். எல். ஏ.க்கள் வாயைக் கட்ட, சாமர்த்தியமான திட்டம் ஒன்றை நீர் செய்திருப்பதாக! கூடிய வரையில், சட்டசபையைக் கூட்டாமலேயிருக்க, நீர் செய்திருக்கும் முடிவும், ஏறக்குறைய, நான் முன்பு

குறிப்பிட்ட யோசனையைப் போன்றதுதான். அப்படியே செய்யும்! நான் கட்டிக் காத்த 'நாசிசமும்' முசோலினி வளர்த்த 'பாசிசமும்' இரண்டும் சொல்லித் தரும் ஆரம்ப பாடம் அதுதான்!! இந்தக் காரியங்களை நீர் செய்வதைக் காணக் காண, எனக்கு உண்மையிலேயே ஆனந்தமாயிருந்தது. 'என்னைப் போன்றவர்கள் இனி எங்கே தோன்றப்போகிறார்கள்?!' என்று கவலைப்பட்ட எனக்கு, சீனாவிலே இருந்த சியாங்கேய் ஷேக், சிறிது தெம்பு கொடுத்தார். ஆனால், அந்தப் 'பொல்லாத' ஜனங்கள், அவரை தூக்கி எறிந்துவிட்டார்கள்! அதைக் கண்டு, கவலைமிகக் கொண்டு கிடந்தேன். ஆனால், கவலை போக்கும் மாமருந்தாக, நீர் உருவெடுத்திருக்கிறீர்! உம்மை வாழ்த்துகிறேன்!!

சில வாரங்களுக்கு முன் சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில், நீர் பேசிய பேச்சைக் கேட்டேன் — திடுக்கிட்டேன். உம்மை எதிர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு புத்திமதி கூறியதாகத் தெரிந்தது. "உங்களைப்போன்றோர், எதிர்காலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க நேரலாம். அதற்குத் தகுதியாக, இப்போது முதல், உங்களைத் தயார் செய்து கொண்டு வாருங்கள்" என்று, தி. மு. க.வைப்பார்த்து, சொன்னீராமே! சொல்லலாமா? பயந்தேன்! பதறினேன்!! அதற்குப் பிறது காஞ்சீபுரம் கூட்டமொன்றில், நீர் பேசியதை அறிந்தபோது, உம்மீது நான் வைத்திருந்த நம்பிக்கை சரியலாயிற்று. யாராவது எதிர்த்தால், அவர்களை, எப்படியாவது ஒழித்துவிட வேண்டுமென்பதுதானே, நமது, சித்தாந்தம். அப்படியிருக்கும் போது, "எதிர்க்கட்சிக்காரர்களை ஆண்டவன் பார்த்துக் கொள்வார். ஆண்டவனைத் துதித்து, அவர்களுடைய புத்திமாற வேண்டும் என்று ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் பஜனை செய்யுங்கள்" என்றீராம். நீரா, இந்த யோசனை, கூறுவது? உமக்கு கடவுள் 'பக்தி' அதிகமென்று கூறுகிறார்களே சிலர், அது உண்மையோ?—என்றெல்லாம் சந்தேகப்பட்டேன். ஏனெனில், எதிர்த்துப் பேசும் கட்சிகள், இருக்கலாம் என்பது, ஜனநாயக முறை. அதைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்பது தானே, நமது கொள்கை. அப்படியிருக்கும்போது, இப்படியேன் பேசுகிறீர், என்று நினைத்தேன்! ஆனால், நீர், தேனாம்பேட்டைக் காங்கிரஸ் மாநாட்டில் பேசிய வார்த்தைகளைக் கேட்டதும், சிந்தை குளிர்ந்தேன்.

"தி. மு. க.வை ஒழித்துக்கட்ட வேண்டும். அதன் கணக்கைத் தீர்த்துவிட வேண்டும். அப்படியொன்று இருந்ததாக, சரித்திரம் கூறும்படிச் செய்ய வேண்டும்", என்று நீர் பேசியிருப்பதைக் கண்டபோது உமது தைரியத்தை வியந்தேன். முஸோலினி ஆனந்த மடைந்தான்—"பார்த்தீரா! ஆண்டவனை முதல்வராம் அழைத்தார். இப்போது, தன்னிடமிருக்கும் அதிகாரத்தைத் துணைக்கழைக்கிறார். ஜனங்களை மயக்கத்தான் அவர் ஆண்டவன் பெயரை அழைப்பது! வேறெதற்குமல்ல!!" என்று விளக்கமும் தந்தான். அதற்குள் இங்கே இருக்கும், ஒரு ஆசாமி— உமக்குத் தெரிந்தவராம் — உம்பெயர் கேட்டாலே, 'படுபாவி! என்னை அரசியல் வாழ்விலிருந்து ஓட்ட முயன்ற சுயநலமி!' என்றெல்லாம் தூஷணை செய்யும் ஒரு ஆசாமி—பெயர் சத்தியமூர்த்தி அய்யராம்— உம்முடைய பேச்சுக்குப் புது விளக்கம் கூறினார்! உமக்கும், அந்த சத்தியமூர்த்தியின் சீடரான காமராஜருக்கும், பலத்த சண்டையாமே. அதில், காங்கிரஸ் காரர்கள் எல்லோரும் காமராஜ் பக்கம் இருக்கிறார்களாமே— அவர்களை உம்பக்கம் இழுக்க, தி. மு. க. எதிர்ப்பை, துணைக்கொள்கிறீராமே — இப்படியெல்லாம் சொன்ன அந்த ஆள், 'ஒருக்காலும் நீர் வெற்றி அடையப்போவதில்லை!' என்றார். உமது குருநாதர், காந்தியார் என்ன சொல்கிறார் என்று அவரிருக்கும் லோகத்திலிருந்து வந்தோரை விசாரித்தேன். அவர், கண்களிலிருந்து, ஆறு வருடங்களுக்குமுன் வழிய ஆரம்பித்த கண்ணீர், இன்னும் அடங்கவில்லையாம்! அதைப்பற்றி நீர், கவலைப்படமாட்டீர் என்பது தெரியும் எனக்கு. இவ்வளவு சாமர்த்தியசாலியான உம்மை, எப்பொழுது காண்போம்?' என்று துடித்துக்கொண்டிருக்கிறேன். நான், இனி, அங்கு வர முடியாது. ஆகவே, விரைவில் வாரும்! வரும்போது எவ்வளவு எலும்புகளைக் கொண்டுவரமுடியுமோ, அவ்வளவையும் சேர்த்து, கொண்டுவாரும்! அவைகளை ஒன்றாக்கி, அருமையான மாலையொன்றை உமக்குப் போடவேண்டும் என்று முஸோலினி சொல்கிறான்!!

இங்ஙனம்,

உம்மால் பரவசமடையும்,

அடால்ப் ஹிட்லர்,

(லேட் ஜெர்மன் சர்வாதிகாரி.)

திருப்பூர் எறும்பு

எறும்புகளும், மூட்டைப் பூச்சிகளும் இன்னமும் இருந்துவருகின்றன. துவேஷத்தில் ஊறிப்போய் வகுப்புத் துவேஷத்தைப் பரப்பும் திராவிட கழகம் போன்றோர்தான் இந்த எறும்புகள். மூட்டைப் பூச்சிகள் ஒளிந்திருந்து கடிக்கின்றன. இந்த எறும்புகள் பகிரங்கமாகவே கடிக்கின்றன. கடி, பலமாக இருக்கும்போது எறும்புகளை நசுக்க வேண்டியது இயற்கையே. மூட்டைப் பூச்சிகளை நாம் அடக்கிவிட்டோம். இந்த எறும்புகளையும் ஒழித்துக் கட்டவேண்டும்.

—ஆச்சாரியார்
6—10—53

சென்னை எறும்பு

புற்று எப்படி ஏற்படுகிறது தெரியுமா? பல எறும்புகள் சேர்ந்து பாடுபடுகின்றன. உள்ளே ஒன்றோடொன்று சண்டைபோடாமல் சேர்ந்து வேலை செய்கின்றன. எப்படி கட்டுப்பாடுடன் எறும்புகள் வேலைசெய்கின்றன. புதிதாகப் பிறந்த எறும்புக்கு யாராவது கற்றுக்கொடுக்கிறார்களா? மகாத்மா யாராவது உபதேசம் செய்துவருகிறார்களா? அது எப்படி தன் வேலையை தானாக இதாருடன் செய்கிறது? எப்படி வரிசை வரிசையாக எறும்புகள் போகின்றன? அமைப்பின் விசேஷத்தைப் பாருங்கள். நம் நாடே ஒரு பெரிய எறும்புப் புற்று மாதிரி, நாம் எறும்புகளைப்போல நடக்கவேண்டும்.

ஆச்சாரியார் 9—10—53

4-ம் பக்கத் தொடர்ச்சி.

லவுமாம் (தவறு தவறு) குலையு
ாம்.

இந்தச் சிறந்த ஏற்பாட்டை நாம் ரவேற்கிறோம். வாலில்லாத வான ச்சேனை பணிபுரிய ஆரம்பித்து ட்டால் நம்முடைய இலட்சியம் ரைவில் வேற்றி பெறுகிறது என்று பாருள்.

அன்றைய வாலுள்ள வானரச் சனையைக் கட்டுப்படுத்தி நடத்திச் சல்ல இராமன் இருந்தார். இன் றயவாலில்லாத வானரச்சேனையை டத்திச் செல்ல இராசகோபாலாச் ரியார் இருக்கிறார். அன்றைய ராமன், அனுமாரின் வாலில் நருப்பைக்கட்டி இலங்கையை எரிக் ப்படி செய்தார். இன்றைய இராச காபாலாச்சாரியார் தம்முடைய சனையின் கையில் தடியும் துப்பாக் யும் தந்து திராவிடத்தைத் தீய வக்கும்படி செய்கிறார்!

அன்றைய இராமனுக்கும் இன் றய இராசகோபாலாச்சாரியாருக் ம்ஒரேவித்யாசம்தான். அதாவது, ாமனுக்கு ஒரு சீதை இருந்து, ாவணன் என்பவனால் கவர்ந்து சல்லப்பட்டுப் பிறகு இராமனால் ட்கப்பட்டது. ஆனால் இராச காபாலாச்சாரியாருக்கு அப்படிப் ட்ட சம்பவம் ஒன்றும் ஏற்பட ல்லை. அதாவது ஆச்சாரியாரின் னைவியார் இயற்கையாகவே றந்து விட்டார்கள். ஆச்சாரியார் ப்போது தனியாகத்தான் இருக்கி ர். அதாவது மறுமணம் செய்து ாள்ளவில்லை என்று பொருள்!

என்ற போதிலும் இராமனுக்குத் வைப்பட்டது போன்ற ஒரு னை ஆச்சாரியாருக்கும் தேவைப் கிறது. ஆச்சாரியாருக்கு அவரு ய சமுதாயவாழ்க்கையை ஒழுங் க நடாத்திச்செல்ல அருமை கக் கிடைத்த துணைவியார் கால ன பின்னர், நாம் மேலே குறிப் ட்டபடி மறுமணம்செய்து கொள் மல்தான் இருந்தார்—இப்பொழு ம் அப்படித்தான் இருக்கிறார்! னல், அவர் தம்முடைய அரசியல் ழ்வுக்காகக் கைப் பிடித்த நாயகி நக்கிறாளே, அவள் மிகவும் பொல் தவள். அவள் ஆட்டுவித்தபடி ல்லாம், ஆச்சாரியார் ஆடவேண் வராகி விட்டார். அவளுடைய யர் சர்வாதிகார அம்மையாம்! அவள் இட்டது சட்டமாம்! "எனக் கொரு சேனை வேண்டும் — இராம னுக்கு இருந்ததுபோல் — ஆனால் வால் மட்டும் இருக்கக்கூடாது" என்று ஒரே பிடிவாதம் செய் கிறாளாம்!

எனவேதான், ஆச்சாரியார் மேற் படி சேனையைத் திரட்டித் தம்மு டைய அரசியல் மனைவியானசர்வாதி கார அம்மாளைத் திருப்திப்படுத்த முற்பட்டிருக்கிறாராம். எனவே தான், இதனை ஒருநல்ல ஏற்பாடு என்று கூறுகிறோம். சர்வாதிகாரம் தலை விரித்தாட ஆரம்பித்து விட் டால், ஜனநாயகம் அண்மையில் வந்துவிட்டதென்று பொருள். எனவே "ஆச்சாரியாரே உம்முடைய முயற்சி விரைவில் வெற்றி பெறட் டும்" என்று வாழ்த்தி வரவேற் கிறோம்.

*

நாம் நினைக்கும் ஜனநாயகம் — அதாவது மக்களுக்குத் தேவை யான ஜனநாயகம், விரைவில் மலர வேண்டுமென்பதுதான் நம்முடைய இலட்சியமாகும். ஒருவரை இன் னொருவர் ஆட்டிப் படைக்கும் சர் வாதிகாரத்தை முறியடிப்பதுதான் நம்முடைய குறிக்கோள். அதற்கு இந்த வாலில்லா வானரச் சேனை துணைபுரியும் என்று நம்புகிறோம்.

*

பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டியதை அநாகரிகம் என்று வலியுறுத்த முன்வந்த ஆச் சாரியார், இன்னொரு விஷயத்தை யும் குறிப்பிட்டுள்ளார். அதாவது, ஒரு இடத்துக்குப் போகிறவர்கள், அந்த இடத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ளமுடியுமானால், அந்த இடத் துக்குப் போகவேண்டும், இல்லை யேல், அந்த இடத்துக்குப் போகக் கூடாது என்று புத்திமதி கூறியுள் ளார். இதனை நாமும் வரவேற்கி றோம்.

கோயிலுக்குப் போனால், ஐம் பொறிகளின் சேஷ்டைகளையும் அடக்கி ஆண்டவனைத் தொழ வேண்டும் என்று புராணங்களில் சொல்லப்படுகிறபடி, பக்தர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

கோர்ட்டுக்குப் போனால், ஆணவ அகம்பாவங்களை அடக்கி மரியாதை காட்டவேண்டும்.

மார்க்கெட்டுக்குப் போனால் தனக்குத் தேவையான பொருள் எங்கே மலிவாகவும் நல்லதாகவும் விற்கப்படுகிறதோ, அந்த இடத் தைத் தேடிப் பிடிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருத்தல்வேண்டும்.

நண்பன் வீட்டுக்குப் போனால், நல்ல முறையில் உறவாடப் பழகிக் கொள்ளவேண்டும். முறையில் தவறு ஏற்பட்டால், நட்பு நிலைக் காது.

வேற்றாருக்குப் போனால் 'இவன் ஒரு விரோதியோ' என்று சந்தே கப்படும்படி நடந்துகொள்ளக் கூடாது.

சுருங்கச் சொல்லவேண்டுமானால் ஆழமறியாமல் காலை விடக்கூடாது என்று கூறிவிடலாம்.

எனவே, ஆச்சாரியார் கூறும் இந் தப் புத்திமதியை நாம் அவசியம் வரவேற்கிறோம்—அதன்படி நடக்க வும் சித்தமாக இருக்கிறோம். ஆனால், இந்தப் புத்திமதியைக் கூறுபவர், தாம் கூறுவதுபோல் தம்முடைய நடத்தையில் நடந்து காட்டுகிறாரா என்பதைக் கவனிக்கும்போதுதான் இவருடைய புத்திமதி ஊருக்கே ஒழியத் தமக்கல்ல என்பது தெரிய வருகிறது.

"ஒரு இடத்துக்குப் போவதா னால், அந்த இடத்தில் நடக்கும் முறைக்குத் தகுந்தபடி நடக்க முடியுமானால் போக வேண்டும். இல்லையென்றால் வீட்டில் இருக்க வேண்டும். இது தான் நாகரிகம்"

என்பது ஆச்சாரியாரின் பொன் மொழி. மிகவும் சரி! உம்முடைய பொன்மொழியை வைரத்தால் செய் யப்பட்ட பேழைக்குள் வைத்துப்

கிருஷ்ணசாமி

கடந்த 5—10—53 திங்கட் கிழமை பகல் 12-30 மணியளவில், சில காங்கிரஸ் காலிகளால் பலத்த வெட்டுக்காயங்களடைந்து சர்க்கார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும், செல்வம் பதிப்பகம் உரிமையாளரும், மதுரை மாவட்ட திராவிட முன்னேற்ற கழகப் பொருளாளரும், 'திராவிட நாடு' ஏஜெண்டுமான தோழர் எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் தற்போது குணமடைந்து வருகிறார் என்பதை, செல்வம் பதிப்பக மானேஜர், இயக் கத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறார்.

போற்றுகிறோம். ஆனால், உம்முடைய பொன்மொழியை நீரே புன்மொழியாக்கினால், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு விடை நீர் கூறா விட்டாலும், நாடு கூறக் காத்திருக்கிறது.

*

காந்தியடிகள் பிறந்த தின விழாவில் கலந்து கொள்ளச் சென்றநீர், அந்த உத்தமரின் நல்ல பண்புகளைப் பற்றியும், அவர் நாட்டுக்காகச் செய்த அரிய பெரிய சாதனைகளைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினீர். காந்தியடிகளைக் கொன்ற கயவனைப் பற்றிப் பேசினீர். இனி 'நமக்கு' அந்தக் குணம் ஏற்படக்கூடாதென்று சூள்உரைத்தீர். பொதுவாகக் காந்தி ஜெயந்தியில் எதைதைக் கூற வேண்டுமோ அதெல்லாம் கூறினீர்.

"இராவணன் கவர்ந்து சென்ற சீதாதேவியைத் தேடித் தேடிக் கண்டு பிடித்துத் திரும்பக் கொண்டு வந்தது போல், காணாமல் மறைந்திருந்த சுதந்திர தேவியைக் கொண்டு வந்து நம்மிடம் ஒப்படைத்து விட்டு காந்திஜி போய் விட்டார். அந்தத் தேவியைத் தூற்றி, அவமதித்து, காட்டுக்குப் போய்விடும்படி செய்யக் கூடாது. நாகரிகமாக, தர்மமாக, மரியாதையாக நடத்தவேண்டும்"

என்றெல்லாம் கூறினீர். இதில், இராமனால் மீட்டுக்கொண்டு வரப்பட்ட சீதையை நெருப்பில் குளிப்பாட்டி, அந்த அம்மையாரின் தூய்மை கெடவில்லை என்பதை நிச்சயித்த பின்னரும், யாரோ ஒருவனுடைய பேச்சைக் கேட்டுத் தன்னுடைய மனைவியைக் காட்டுக்கனுப்பிய காட்டுமிராண்டி இராமனுடன் உத்தமர் காந்தியை ஒப்பிட்டுப் பேசியதும்,

"இராமன்போல், கிருஷ்ணன் போல் கடவுளாகப் பூஜிக்கக் கூடியவர் காந்திஜி"

என்று கூறியதும் தவிர, மற்ற உம்முடைய பிரசங்கம் முழுவதும், வாலில்லாத வானரச் சேனையை உண்டாக்கியதுவரை எல்லாமே நன்றாக அமைந்திருந்தது. ஆனால் கடைசியில்தான் 'நீர் யார்" என்பதைக் காட்டிவிட்டீர். "நான்காந்தியாரின் வழிவந்தவன்தான் என்றபோதிலும், தற்சமயம் ஜார், ஹிட்லர் போன்றோர் வகுத்த வழியைப் பின்பற்றுபவனாக மாறிவிட்டேன்" என்று கூறி உம்முடைய பிரசங்கத்தை முடித்திருக்கிறீர்.

அகிம்சா மார்க்கத்தைப் போதித்த அண்ணலின் பிறந்த தின விழாக் கொண்டாட்டத்திலே, ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்கும் இடையே துவேஷத்தைவளர்க்கும் விதையைத் தூவிவிட்டீர். பண்டிதநேருவுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கருப்புக் கொடி காட்டிய சம்பவத்தைக் குறிப்பிட்டு அவர்களுக்கு ஒரு முடிவு காணவேண்டுமென்றும், ஆனால் அவசரப்படக்கூடாதென்றும் பேசியிருக்கிறீர். அவசரப்பட்டோ, மெதுவாகவோ எப்படியும் "ஒரு முடிவு காணவேண்டும்" என்ற முடிவுக்கு வந்துவிட்டீர்.

காந்தி ஜெயந்தி விழாவில் கலந்து கொள்ளச் சென்ற உமக்குக் கருப்புக் கொடி பிடித்த கதை ஏன் நினைவுக்கு வந்தது என்பதை எண்ணும் போதுதான், நீர் யார் என்பதும், ஏன் அடிக்கடி பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு திராவிடப் பெருங்குடி மக்களைப் பற்றிப் பேசுகிறீர் என்பதும் நன்கு தெரிகிறது. இந்த இலட்சணத்தில் "போகிற இடத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ளவேண்டும்" என்று வேறுபேச ஆரம்பித்துவிடுகிறீர். காந்திஜெயந்தி விழாவில் கருப்புக் கொடிக் கதை பேசியிராவிட்டால், உமக்குக் கருப்புக்கொடிப் பரிசும் கிடைத்திருக்காது — அதையொட்டிக் கலவரமும் ஏற்பட்டிருக்காது. நீர் கருப்புக் கொடிக் கதையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்தக் கூட்டத்தில் யாதொரு கலவரமும் ஏற்படவில்லை.

"ஒரு சிலர் கருப்புக்கொடி பிடித்தனரே! அநாகரிகத்தை இது காட்டுகிறது"

என்று நீர் பேசியபோதுதான் ஒரு இளைஞர் உமக்கு ஒரு கருப்புக் கொடியைப் பரிசளித்ததாகவும், அதையொட்டிப் பரபரப்பு ஏற்பட்டதாகவும் உம்மை ஆதரிக்கும் பத்திரிகைகளே கூறுகின்றன. இது, போன வேலையை விட்டு வேறு வேலைபார்க்க முற்பட்டதால் ஏற்பட்ட விளைவு என்பதை நீர் ஒப்புக் கொள்வீர் என்ற நம்பிக்கையின் பேரிலேயே இதனைக் குறிப்பிடுகிறேன்.

காந்தியடிகளின் பிறந்த தின விழாவில் ஆச்சாரியாரின் பேச்சால் ஏற்பட்ட அந்தக் கலவரம் அவருக்கு ஒரு நல்லறிவையும் உண்டாக்கியிருப்பதைக் காணப் பெரிதும் மகிழ்கிறோம். திருப்பூரில் திராவிட முன்னேற்றக் கழகத் தினரை எறும்பாக்கி, அது பலமாகக் கடிக்கும்போது நசுக்குவது இயற்கையே என்று கூறியவர் சென்னைக்கு வந்ததும், என்ன காரணம் பற்றியோ "எறும்புகள் மிகமிக நல்லவை" என்று கூறிவிட்டார். சுறு சுறுப்பாகப்பாடுபடும் இயல்பும், ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொள்ளாமல் சேர்ந்துபணியாற்றும்பண்பும், கட்டுப்பாடும், யாரும் கற்றுக்கொடுக்காமல் தானாகவே வேலைசெய்யுந்தன்மையும், வரிசையாகச் செல்லும் ஒழுக்கமும், பின்னால்வரும் ஆபத்தைமுன்கூட்டியே உணர்ந்து முன் எச்சரிக்கையுடன் காரியங்களைச் செய்வதும் எறும்புகளுக்குஇயல்பாகவே அமைந்துள்ள சிறந்த குணங்கள்என்றும், இங்ஙனமுள்ள அனைவரும் எறும்புகளைப் போல் நடக்கப் பழகிக் கொள்ள வேண்டுமென்றும், நம்மைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் எறும்புகளைப் (திராவிடர்களை) பற்றி தெளிவுரை ஆற்றியுள்ளார். இந்தத் தெளிவு ஆச்சாரியாரிடம் நீடித்திருப்பது அவருக்கு மட்டுமல்ல, நாடு முழுவதுக்குமே நல்ல பயனைத் தருவதாகும் என்பதைத் தவிர வேறுஎன்ன கூறமுடியும்?

★

மறைவு!

நம் 'திராவிடநாடு' ஏஜண்டு தோழரான லால்குடி ராமசாமியின் துணைவி வேதவல்லி 10-10-53 திடீரென இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

.Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at"Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.